மலர்-4 இதழ்-94 ஜூலை 16-31 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# இறைவனை தவறாக பேசினால் நாக்கை வெட்டும் நாயனார்

## புத்திர பாக்கியம் தரும் திருப்புலானி நாக வழிபாடு

குழந்தை பாக்கியத்திற்காக தசரதர் புத்திரகாமேஷ்டி யாகம் நடத்தினார். யாககுண்டத்தில் இருந்து வெளிப்பட்ட பாயாசத்தை தனது மனைவியருக்கு தசரதர் கொடுத்தார். இந்த யாகப் பலனால் ராமர், இலட்சுமணன் அவரது சகோதரர்கள் பிறந்தனர்.

இதன் அடிப்படையில், திருப்புலானி ஸ்ரீஆதி ஜெகநாதப் பெருமாள் கோவிலில் பிள்ளை வரத்திற்காக ஒரு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

அதிகாலையில் சேதுக்கரை கடலில் நீராடிவிட்டு கோயிலுக்கு வந்து அங்கு தரப்படும் நாகர் சிலைக்கு ஒரு நாள் முழுவதும் கணவனும், மனைவியும் உபவாசகம் இருந்து அபிஷேகம் செய்ய வேண்டும். பின்பு அன்றிரவு கோயிலில் தங்கிவிட்டு, மறுநாள் காலையில் முறைப்படியாக நாகபிரதிஷ்டை செய்துவிட்டு, புத்திர காமேஷ்டியாகம் செய்து விட்டு, பிரசாதமாகத் தரப்படும் பால் பாயாசத்தை அருந்தினால் பிள்ளை வரம் கிடைக்கும் என்பது ஐதீகம். தசரதன் பிரதிஷ்டை செய்த நாகலிங்கம் இன்றும் கோயிலில் உள்ளது.



## அபூர்வ பிரதோஷம்



ஒரு மாதத்தில் பெரும்பாலும் இரண்டு பிரதோஷம் தான் வரும்.

ஆனால் இந்த சார்வாரி ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் சுமார் மூன்று பிரதோஷம் வருவது அபூர்வ பிரதோஷமாக கருதப்படுகிறது.

1. 1.8.2020 ஆடிமாதம் சனிப்பிரதோஷம்.
2. 16.8.2020 ஆடிமாதம் ஞாயிறு ஆதி வாரம் பிரதோஷம்.
3. 30.8.2020 ஞாயிறு ஆதிவாரம் பிரதோஷம்.

இதுபோன்று பிரதோஷம் அத்தி பூத்தால் போல் தான் வரும்.

சீதையை மீட்க இலங்கை சென்ற ராமர், கடலில் பாலம் அமைப்பதற்காக சமுத்திரராஜனிடம் அனுமதிகேட்டு மூன்று நாட்கள் காத்திருந்தார். ஆனால் சமுத்திரராஜன் அனுமதி தராமல் இழுத்தடித்துள்ளான். அந்த சமயம் ராமபிரான் தர்ப்பைப்புல்லின் மீது சயனம் கொண்டார். இதன் அடிப்படையில் திருப்புலானி ஸ்ரீஆதி ஜெகநாதப் பெருமாள் கோவிலில், ஆதிசேஷன் மீது ராம பிரான் தர்ப்பை விரித்து, அதில் சயனிக்கும் வகையில் சிலை வடிக்கப்பட்டுள்ளது.

## சயன கோலத்தில் ராமன்







## கடவுள் இருக்கிறாரா? இல்லையா?

கௌதம புத்தர் சொன்னது....

ஸ்ரீராமரின் கோவில்களை அதிகமாக கட்டிய பக்தர் தன் வயதான காலத்தில் வியாதியால் கஷ்டப்படும் போது கடவுள் இருக்கிறாரா என சந்தேகம் வந்தது.

தனது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள கௌதம புத்தரிடம் கேட்டார் "கடவுள் இருக்கிறாரா..இல்லையா" என்று...

வந்திருப்பவர் ஓர் பக்தர், ராமருக்கு பல ஆலயம் எழுப்பியவர் என ஞான திருஷ்டியால் அறிந்துக் கொண்ட கௌதமர், அவரிடம் "கடவுள் இல்லை" என்றார்.

அன்று மாலை அதே இடத்தில், இளம் வயது முதல் கடவுள் இல்லை, கடவுள் இல்லை என பங்கு பெரும் வாக்குவாதத்தால் வெற்றி அடைந்து பெரும் பொருளை சம்பாதித்தவர், அவரின் வயதான காலத்தில் தான் நிறைய பாவங்களை செய்ததாக எண்ணி இறந்த பின் நரகத்திற்கு செல்ல வேண்டுமோ என பயந்து, தெளிவு படுத்திகொள்ள கௌதம புத்தரிடம் கேட்டார்.

"கடவுள் இருக்கிறாரா" என...

தன் ஞான திருஷ்டியால், வந்தவர் யாரென்பதை உணர்ந்து கௌதம புத்தர் சொன்னார்

"கடவுள் இருக்கிறார்"

கடவுளை தேடு என்பதே ஸ்ரீ கௌதம புத்தர் சொன்ன வித்து.



## RIP என்று சொல்லாதீர்கள்



ரெஸ்ட் இன் பீஸ் RIP என்ற ஆங்கில வார்த்தையை நாம் அனைத்து மதத்தினருக்கும் உபயோகிக்கிறோம். உண்மையில் இந்த வாக்கியத்தின் பொருள் என்ன என்று பார்ப்போம்.

கிறிஸ்துவ மதத்தில் உள்ள நம்பிக்கை என்னவென்றால் இறைவன் ஒரு நாள் இந்த பூமிக்கு வருவான் அன்று அனைவர்க்கும் Judgement டே. அவரவர்கள் செய்த பாவ புண்ணியங்களை கணக்கிட்டு அவர்களுக்கு சொர்க்கமா, நரகமா என்று முடிவு செய்வான் என்கிறது.

அது வரை சவ பெட்டியில் அமைதியாக உறங்கு என்பதை குறிக்கும் வகையில் ரெஸ்ட் இன் பீஸ் என்று அழைத்தார்கள் இன்று நாம் இதை அனைவர்க்கும் உபயோகிக்கிறோம்.

ஒரு இந்து மரணித்தால் இந்து மதங்களின் தத்துவங்களின் படி அவர்களின் உடல் மரணிக்கிறது ஆன்மா சாந்தி அடைந்தால் அது இறைவனுடன் கலக்கிறது. ஆன்மா இறைவனை நாடி சென்றுவிடும்.

அதனால் நாம் அந்த ஆன்மா சாந்தி அடைய வேண்டும் என்று பிராத்திக்கிறோம் அதனால் இந்து மதத்தினர் இறந்து போனால் ரெஸ்ட் இன் பீஸ் என்று சொல்வதை தவிர்க்கலாம்.

இந்து மத கலாச்சாரம் மரணத்திற்கு மிக முக்கியத்துவம் தருகிறது. இறந்தவர்கள் ஆத்மா இறைவனிடம் சாந்தி அடையட்டும் என்று வேண்டிக்கொள்வோம்.

# அகவாழ்வும், புறவாழ்வும் சிறக்க
# ராமனையும், கிருஷ்ணரையும் பின்பற்றுங்கள்

எப்போதும் அடிபணிந்து நடந்து கொண்டே இருந்தாலும், எப்போதும் தன்னை உயர்ந்தவன் என்று எண்ணிக்கொண்டே இருந்தாலும், கடை சியில் மிகப் பெரிய தோல்விதான் கிடைக்கும்.

வாழ்க்கையில் மட்டுமல்ல, இறை நிலையில் கூட மேற்கண்ட இரண்டையும் எவ்வாறு கடை பிடிக்க வேண்டும் என்பதை ஸ்ரீ ராமபிரான் மற்றும் கிருஷ்ணரிடமிருந்து கற்றுக் கொள்வது சிறந்தது. தன்னை 'அடியேன்' என்று சொல்லிக் கொண்டே அனைவரிடமும் பழகி, எல்லோரையும் மதித்து வாழ்ந்தவர் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திதான்.

தன்னை அவதாரமாக அவர் ஒருபோதும் காட்டிக் கொள்ளவில்லை. எப்போதும், எங்கும் தன்னை 'அடியேன்' என்றுதான் சொல்லிக் கொண்டார்.

விஸ்வாமித்திரரிடம் 'அடியேன்' என்றுதான் பணிந்தார்.

பரத்வாஜ முனிவரைப் பார்த்ததும், 'அடியேன்' என்று சொல்லித்தான் நமஸ்கரித்தார்.

வசிஷ்டரைச் சந்தித்ததும், 'அடியேன்' எனப் பரவசப்பட்டு வணங்கினார்.

சீதா தேவியை காப்பாற்ற இலங்கைக்கு செல்ல தடையாக இருந்த சமுத்திரராஜனிடம்கூட அப்படி 'அடியேன்' என்று சொல்லித்தானே வழி விடும்படி மூன்று நாட்கள் வேண்டினார்.

ஆனாலும் சமுத்திர ராஜன், கடலைக் கடப்பதற்கு வழிவிடவில்லை.

இறைவனே அடிபணிந்து கேட்கும்போது, கடவுளை விட தான் பெரியவன் என்ற எண்ணம்சமுத்திர ராஜனுக்கு தோன்றி, அதுவே சற்று தலைக் கணமாக மாறியது.



இந்த இடத்தில் ராமன் "என்னுடைய வில்லையும் அம்பையும் எடுத்து வாருங்கள். இந்தக் கடலை அப்படியே வற்றச் செய்கிறேன். அப்படி வற்றினால்தான், வானரங்கள் கடலைக் கடக்க, வழி கிடைக்கும்"என்றாரே, பார்க்கலாம்!

அதிர்ந்த சமுத்திரராஜன் எந்த பேச்சும் பேசாமல் இராமபிரானுக்கு வழிவிட்டான்.

ஆக... எவருக்கு, எப்போது, எதனால் அடிமையாக, தாசனாக, அடியவனாக இருக்க வேண்டுமோ, அப்போதெல்லாம் அப்படி இருப்பதே சிறப்பு என்பதை வாழ்ந்து காட்டிய அவதார புருஷன் ஸ்ரீராமபிரான்.

அதே சமயம்....

'நானே பெரியவன்' என்று பறைசாற்றியது பகவான் ஸ்ரீகிருஷ்ணர்தான்?

கீதையில், பல இடங்களில், 'நானே பெரியவன்' என்று அர்ஜுனனுக்கு அருளியுள்ளார்.

இந்த மனோ நிலையை ஒருசில இடங்களில் அவசியம் நமக்கு கை கொடுக்கும், உதாரணமாக கூறவேண்டுமென்றால்,

ஒரு தொழில் நிறுவனத்தில் பணி செய்யும் பலருக்கு, அந்த தொழில் நிறு வனத்தை நடத்துபவன் முதலாலியாக விளங்குவான், அப்படி அத்தனை தொழிலாளிகளுக்கும் தான்தான் ஆதாரமாக விளங்குவதாகவும் அவர்களின் வாழ்க்கைக்கு தான் ஆதாரமாக விளங்குவதால் தன் தொழில் சிறப்பாக நடைபெற வேண்டுமானாலும் தன்னைவிட ஒரு நல்ல தரமான பொருளை மற்றவர் தரமுடியாது என்ற எண்ணத்தை தன் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும், இந்த எண்ணம் அவனை தலைக்கணம் கொண்டவனமாக மாற்றாமல் அவன் மனதையும் அவன் கட்டுப் படுத்த தெரிந்தவனாக இருக்கவேண்டும், இது எப்படி என்றால் தான் கடவுளாக இருந்தாலும், அ ர் ஜ ு ன னு க் கு தேரோட்டியாகத்தான் கிருஷ்ணர் மகாபாரத யுத்தத்தை நடத்தி வைத்தார்.

இதுபோன்ற தலைக்கண எண்ணம் தனது தயாரிப்பில் இருக்கவேண்டுமே ஒழிய, தன்னிடம் பணிபுரியும் பணியாளர்களிடம் இருக்க கூடாது.

முதலாளியின் தொழிலுக்கு வரவேற்பு இருந்தால்தான் தொழில் புரிபவர்களுக்கு வருமானம் கிடைக்கும், பணிசெய்பவர்களுக்கு கூலி கிடைக்கும். எதற்கெடுத்தாலும், எங்கே தீங்கு நேர்ந்தாலும், 'சங்கை ஊதிவிடுவேன்; சக்கரத்தை ஏவி விடுவேன்' என்பது போல், தயாராக, துடிப்புடனும் விழிப்புடனும் அஞ்சாநெஞ்சனாக, 'நானே பெரியவன்' என மார்தட்டிச் சொன்னவர், ஸ்ரீகிருஷ்ணன்.

அதனால்தான் அவருக்கு 'சர்வசு நிலையஹ' எனும் திருநாமம் உண்டானது. 'இந்த உலக உயிர்கள் அனைத்துக்கும் இருப்பிடமாகத் திகழ்பவன்' என்று இதற்குப் பொருள். உலகத்து மனிதர்கள் அனைவருக்கும் புகலிடமாக, அடைக்கலம் தருபவனாக இருப்பவன்தானே, மிகப் பெரியவன்! அப்படியெனில், பகவான் சொன்னதில் தவறென்ன இருக்கிறது?



## அசுரர்கள் யார்? தேவர்கள் யார்?



கிருஷ்ணன் கீதையின் 16வது அத்தியாயத்தில், அசுரர்களையும் தேவர்களையும் பிரித்துப் பகுத்து எடுத்துரைக்கிறார் அர்ஜுனனிடம்! இதையெல்லாம் கேட்ட அர்ஜுனனுக்கு சின்னதாக ஒரு பயம், பதற்றம், குழப்பம்! 'அசுரர்களையும் தேவர்களையும் பற்றிச் சொல்கிறானே கண்ணன்... நம்மை இவன் அசுரனாக நினைக்கிறானா, அல்லது தேவர்களில் ஒருவனாக மதிக்கிறானா? என்று தவித்தான்; மருகினான்.

கண்ணனிடம் மெள்ள, 'அசுரர்கள் என்பவர் யார்? தேவர்கள் என்பவர் யார்? ஒற்றை வரியில் தெளிவாகச் சொல்லேன், கண்ணா! என்று கேட்டான்.

உடனே கண்ணபிரான், 'சாஸ்திரங்களையும் அதன் விதிமுறைகளையும் யாரெல்லாம் அத்துமீறுகிறார்களோ அவர்கள் அசுரர்கள். அந்த சாஸ்திரத்தையும் அதன் விதிமுறைகளையும் போற்றி, அதன்படி யாரெல்லாம் வாழ்கிறார்களோ, அவர்கள் தேவர்கள்! என்றார்.

உடனே அர்ஜுனன், 'சரி கண்ணா, நான் யார்? என்று கேட்டான். 'இதிலென்ன சந்தேகம்? உன்னிடம் எத்தனை முறை 'நான் பெரியவன்... நான் பெரியவன்... என்று என்னைச் சொல்லிக்கொண்டே இருந்தேன்.

அதையெல்லாம் பொருட்படுத்தாமல், என் நல்லுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்த நீ, தேவர்களில் ஒருவன் தான்! என்று சொல்லிப் பூரித்தார் கண்ணபிரான்.

கண்ணனின் பதிலில் வியந்தும் நெகிழ்ந்தும் போனான் அர்ஜுனன்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# கண்ணன் மனதில் சகுனி



அபிமன்யுவின் மனைவி உத்தரைக்கு முனிவர் ஒருவர், மாயக்கண்ணாடி ஒன்றை பரிசாக வழங்கினார். அந்தக் கண்ணாடி முன் ஒருவர் வந்து நின்றால், அவர் மனதில் யார் இருக்கிறாரோ, அவர் அதில் தெரிவார்.

உத்தரையே முதலில் அதை சோதனை செய்தாள். திருமணமானதில் இருந்து, அவளது அன்புக் கணவன் அபிமன்யுவைத் தவிர அவளது உள்ளத்தில் வேறு யாருமில்லை. எனவே, அபிமன்யு கண்ணாடியில் தெரிந்தான்.

அபிமன்யுவும், மனைவி மீது தீராக்காதல் கொண்டிருந்தான். அவனை கண்ணாடி முன்னால் நிறுத்தினர். அப்போது, உத்தரை அதில் தெரிந்தாள். அந்த சமயத்தில் மாயக்கண்ணன் அங்கு வந்தார். அவர் மனசுக்குள் யார் இருக்கிறார் என்று பார்க்க எல்லாருக்கும் ஆசை.

அர்ஜுனன் என்னை விட்டால் யார் இருப்பார்? எனச் சொல்ல, போடா! அவன் மனதில் நான் தான் இருப்பேன், என பீமன் வம்புக்குப் போல, இருவருமே இல்லை! நான் தான் இருப்பேன், என தர்மர் பிடிவாதமாய் சொல்ல, ஏன்... அவனது தந்தை வசுதேவனின் தங்கையான நானல்லவா இருப்பேன், என மனதுக்குள் நினைத் துக் கொண்டாளாம் குந்தி. எல்லாரும் ஆர்வமாயினர். கண்ணனைக் கையைப் பிடித்து இழுக்காத குறையாக கண்ணாடி முன் கொண்டு வந்து நிறுத்தினர். என்ன ஆச்சரியம்! யாருக்கு கண்ணனை அறவே பிடிக்காதோ, யாரொருவன் கண்ணனைக் கொல்ல திட்டமிட்டிருக்கிறானோ அந்த சகுனி கண்ணாடியில் தெரிந்தான். கண்ணா! மாயம் செய்கிறாயா? என அனை வரும் ஒரே நேரத்தில் கேட்டனர்.



இல்லை..இல்லை... என்னைக் கொன்றே தீர வேண்டுமென தூக்கத்தில் கூட என் னையே சிந்தித்துக் கொண்டிருக்கிறான் சகுனி. என்னை எப்படி எண்ணுகிறார்கள் என்பது முக்கியமல்ல! கணநேரமும் என்னை மறவாத வர்கள் என் இதயத்தில் இருப்பவர்கள், என் றான் கருணையுள்ள கண்ணன்.





ஆச்சரியமான
உண்மை....
சந்தா இல்லை
நன்கொடை பெறுவதில்லை
விளம்பரங்கம் வாங்குவதில்லை
ஆனாலும் வெற்றிகரமாக
100வது இதழை நோக்கி
உலகமெங்கும் 60,000 ஆன்மிக வாசகர்களுடன்,
தரத்திலும், வடிவமைப்பிலும் நம்பர் 1 ஆன்மிக
இ–புத்தகமாக வெளிவரும் ஒரே இதழ்
ஆன்மிகமலர்.காம் இணையதளம் மூலம் வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில்புத்தகம் மட்டுமே....
❖தனித்திருப்போம் ❖உலகை காப்போம் ❖கரோனாவை அழிப்போம்...

# அரசமரமாக காட்சி தரும் பெருமாள்

காத்தல், அழித்தல், படைத்தல், என்ற அனைத்தையும் தாமே செய்து வந்த பரம் பொருள் மும்மூர்த்திகளைப் படைத்து அவரவ ருக்கு தொழில்களை பிரித்து கொடுக்க எண்ணிய போது பிரம்மனைப் படைத்து, தொடர்ந்து நவ பிரஜாபதிகளையும், இந்திரனையும் தோற்று வித்தது. பிறகு பிரம்மனிடம் படைப்புத் தொழிலை ஒப்படைத்தது.

படைப்புத் தொழிலை துவங்க தெற்கு நோக்கிப் புறப்பட்டார் பிரம்மா. அப்போது ஆயிரம்கோடி சூரியப் பிரகாசத்துடன் ஜோதி ஒன்று தோன்றி மறைவதைக் கண்டார்.

அந்த ஜோதியின் ரகசியம் என்ன என்று விசாரித்தார். அதுவே போத ஸ்வரூபமான போதி மரம். அந்த மரத்தடியில் தான் ஜகந்நாதன் தங்குகிறான் என்று அசரீரியாய் பதில் கிடைத்தது.

72 சதுர் யுகங்களுக்கு முன்பு புல்லவர், காலவர், கண்ணவர் ஆகிய மூன்று மகரி ஷிகளும் தர்ப்பை புல் நிரம்பிய இடமான திருப் புல்லாணி காட்டில் பெருமாளைவேண்டி கடும் தவம் செய்து வந்தனர். இவர்களின் தவத்தினால் அகம் மகிழ்ந்த பெருமாள் அரச மரமாக இவர்கள் முன்பு காட்சியளித்தார்.

அதைக் கண்டு மகரிஷிகள் மகிழ்ந்தாலும் பெருமாளிடம் உண்மையான சொரூபத்தில் காட்சியளிக்கும்படி வேண்டினர். உடனே மகரி ஷிகளின் வேண்டுகோளை ஏற்று ஆதிஜெகநாத பெருமாளாக காட்சியளித்தார்.

திருப்புலானி ஸ்ரீஆதி ஜெகநாதப் பெருமாள் கோவிலில் ஜெகநாதப் பெருமாள் இன்றும் அரசமரமாகவே காட்சியளிக்கிறார். தற்போதும் இந்த அரச மரத்தை சுற்றி நாகர் சிலைகளை வைத்து வழிபட்டு செல்கின்றனர்.

பகவான் கிருஷ்ணர் பகவத்கீதையில், “மரங்களில் நான்அரசமரமாக இருக்கிறேன்’ எனச் சொல்லியுள்ளார். இத்தகைய சிறப்பு பெற்ற அரச மரமே இத்தலத்தின் விருட்சமாகும். இந்த மரம் சுவாமி சன்னதிக்குப் பின்புறம் உள்ளது. பக்தர்கள் இதை மகாவிஷ்ணுவாக கருதி வழிபடுகிறார்கள்.

இந்த திருத்தலத்தில் ஸ்ரீஜெகநாதர் வாசம் செய்த அரச மரத்துக்கும் அபிஷேகம் நடக்கிறது.

அரச மரத்தடியில் இருக்கும் மண்ணையும், உலர்ந்த பட்டையையும் எடுத்துச் சென்று அருகில் இருக்கும் சக்கர தீர்த்த நீரில் குழைக்கின்றனர். அதை நெற்றியில் பூசிக் கொள்கின்றனர். இந்த கலவையையே மருநதாகப் பயன்படுத்துகின்றனர்.

குளத்தின் நீரை அருந்திவிட்டு, அரச மரத்தை வலம் வந்து வணங்கி வழிபட்டால் நோய்கள் நீங்குகிறது என்பது நம்பிக்கை. சக்கர தீர்த்தத்தின் நீர் அடிக்கடி நிறம் மாறும் என்பதாக ஐதீகம். அதற்கேற்ப நாட்டின் நடப்பு அமையும் என்பது நம்பிக்கை.

நீர் தெளிவாக இருந்தால் தேசத்துக்கு நன்மை என்றும் பொன்னிறமாக மாறினால் விளைச்சல் குறையும் என்றும் பாசி படர்ந்தால் கால்நடைகள் நாசம் என்றும் விவரிக்கிறது ஸ்தல புராணம்!




# கடனையும் நோயையும் தீர்க்கும் செவ்வாய் ஓரை



நமக்கு தீராத கடன் இருந்தால், அதை தீர்க்க செவ்வாய்கிழமை மிகவும் அற்புதகமாக உதவி செய்கிறது.

பலர் பெரும்பாலும் சிறிய தொகையோ அல்லது பெரிய தொகையையோ கடன் வாங்கி இருந்தால், அதை அடைக்க முடியவில்லை என புலம்பித்தள்ளுவார்கள். இதற்கு, கடன் அடைக்க நாள் நட்சத்திரம், நேரம் உள்ளது.

குறிப்பாக, கடன், நோய் மற்றும் வழக்கு இவற்றை அடைக்கவும், இவற்றிலிருந்து விடுபடவும் செவ்வாய்கிழமையில் செவ்வாய் ஓரையில் கடனை செலுத்துவது சிறப்பு ஆகும்.

இவ்வாறு செய்தால், கடன் விரைவில் தீரும். அதே போல, நோய் உள்ளவர்கள் செவ் வாய்கிழமை, செவ்வாய் ஓரையில் வைத்தியம் பார்த்தால் விரைவில் நோய் குணமாகும்.

இதேபோல வழக்கு உள்ளவர்களும், செவ் வாய்கிழமை, செவ்வாய் ஓரையில் அதற்கு தீர்வு காண முயன்றால் நமக்கு ஜெயம் உண்டாகும்.

ஆனால் அதேசமயம் ஹஸ்தம் நட்சத்திரத்தில் கடன் வாங்கினால் மென்மேலும் கடன் பெருகி, பெரும் தொலையே உண்டாகும் என ஜோதிட சாஸ்திரம் கூறுவதாக கூறப்படுகிறது.

எனவே, செவ்வாய், முருக கடவுளுக்கு உகந் தது. செவ்வாய் அன்று செவ்வாய் ஓரையில் முருகனை மனம் உருகி வழிபடுவதும் சிறப்பு தரும்.

# எதிர்ப்புகள் விலகவும் செயலில் பலமும் பலனும் கிடைக்க அனுசரிப்போம்

## வளர்பிறை பஞ்சமி திதி

# வராகி விரதம்



மனிதர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் ஏதாவது ஒரு நன்மையையோ அல்லது தீமையையோ தருவதாக அமையும், அந்த வகையில் தீமைக்குரிய பலன்கள் தலைமுறை தலைமுறையாக அவசியம் அனுபவித்தே தீரவேண்டும் என்பது விதி.

எந்த பாவமும் செய்யாதவர்களைக் கூட தலைமுறை பாவங்கள், தாக்கும், மாய மந்திர தந்திரங்கள் கூட, ஒருசில நேரங்களில் சிலரால் பயன்படுத்தப்பட்டு, சிலர் அவதிப்படுவார்கள். இதுபோன்ற எவ்வித எதிர்ப்புகளும் அகல, பஞ்சமி திதியில் வராஹி தேவிக்கு விரதம் இருந்து வழிபட்டால் மேற்கண்ட பிரச்சனைகள் அனைத்தும் நீங்கும்.

வராகி அம்மன் பன்றி முகத்துடன் நான்கு கைகளுடன் அருள்பாலிப்பவர். இவர் திருமாலின் வராக அவதார அம்சமாக பார்க்கப்படும் அம்மன் ஆவார்.

பல கோயில்களில் தனி சன்னதிகளில் கருமை நிற ஆடை உடுத்தி சிம்ம வாகனத்தில் அமர்ந்து காட்சி தருவார்.

இவரின் ஆறு கரங்களில் வரத, அபய ஹஸ்தத்துடன் உள்ளார். மற்ற கைகளில் சூலம் ஏந்தியும், கபாலம், உலக்கை, நாகத்தை பிடித் திருக்கிறார்.

சப்த கன்னிகள்

பிராம்மி அம்மன், மகேசுவரி அம்மன், கௌமாரி அம்மன், நாராயணி அம்மன், வராகி அம்மன், இந்திராணி அம்மன், சாமுண்டி அம்மன் என சப்தகன்னிகள் உள்ளனர். இவர் சப்த கன்னிகளில் ஐந்தாவதாக இடம்பெறுகிறார்.

வராகி தேவிக்கு, வளர்பிறை பஞ்சமி திதியில் விரதம் இருந்து வாராஹி தேவியை மனதார வழிபட்டால், எதிர்ப்புகளையெல்லாம் துவம்சம் செய்வாள். செயலில் பலமும் பலனும் தந்தருள்வாள் என்பது ஐதீகம்.

வாராஹிதேவிக்கு, பூண்டு கலந்து, தோல் நீக்காத உளுந்த வடை படையல் மிகவும் விசேஷம். நவதானிய வடை, மிளகு சேர்த்த வடை, வெண்ணெய் எடுக்காத தயிர்சாதம் நைவேத்தியம் செய்தால், அகம் குளிர்ந்து மகிழ்ந்து அருள்வாள் வராகி அன்னை!

மொச்சை, சுண்டல் நைவேத்தியம் செய்வதும் சிறப்பு. சுக்கு அதிகம் சேர்த்து பானகம் செய்தால், அந்த வெல்லக் கரைசல் போல், நம் வாழ்வில் இன்பத்தையும் நிம்மதியையும் சேர்த்துக் கலந்திடுவாள் வாராஹி.





மிளகும் சீரகமும் கலந்த தோசை, குங்குமப்பூவும் சர்க்கரையும் ஏலக்காயும் லவங்கமும் பச்சைக்கற்பூரமும் கலந்த பால், கறுப்பு எள்ளுருண்டை, சர்க்கரை வள்ளிக்கிழங்கு ஆகியவற்றையும் நைவேத்தியமாகச் செய்து விரதம் இருந்து வராஹி தேவியை வணங்க, அம்பிகையின் சேனாதிபதியான வராஹி அம்மன், வாழ்வில் வரம் பல தந்து, நம் வாழ்வையே வரமாக்கித் தந்தருள்வாள்

வீட்டில் குடும்பமாக அமர்ந்து விளக்கேற்றி மனமுருக பிரார்த்தனை செய்யுங்கள். தீய சக்திகள் அனைத்தையும் விரட்டி, காத்தருள்வாள் வாராஹி தேவி!

பெண் தெய்வங்களில் ஒருவர் வராகி அம்மன். இவர் ராஜராஜேஸ்வரி அம்மனின் குதிரைப்படைத் தலைவியாகவும், பத்மாவதி அம்மனின் காவல் தெய்வமாகவும், சப்த கன்னியரில் ஒருவராகவும் அறியப்படுகிறார்.

சப்த மாதர்களில் வாராஹி அவர்கள் அத்தனை பேரிலும் காரியத்திலும் வீரியத்திலும் வேகம் கூட்டி, அருளும் மகாசக்தி கொண்டவள்.

மகா வராகி, ஆதி வராகி, ஸ்வப்ண வராகி, லகு வராகி, உன்மத்த வராகி, சிம்ஹாருடா வராகி, மகிஷாருடா வராகி, அச்வாருடா வராகி என எட்டு வராகிகள் அஷ்டவராகி என்று அழைக்கப்படுகிறார்கள்.

வராகி அம்மனின் மூல மந்திரத்தை 26 நாட்கள் தினமும் ஜெபம் செய்து வர அவளின் அருள் கிடைக்கும்.

மஹா வராஹி மூல மந்திரம்:

ஓம் க்லீம் வராஹ முகி ஹ்ரீம்
ஸித்தி ஸ்வரூபிணி
ஸ்ரீம் தன வசங்கரி தனம் வர்ஷய
ஸ்வாகா

வராஹி அம்மனை வழிபடுபவர்கள் வெள்ளை மொச்சைப் பருப்பை வேக வைத்து அதனுடன் தேன் மற்றும் நெய்யை கலந்து நைவேத்தியமாக படைத்து வழிபட்டால் மிகுந்த பலன் அடையலாம்.

வளர்பிறை பஞ்சமி திதியில் இந்த விரதத்தை கடுமையாக அனுசரித்து தொடர்ந்து 28 நாட்கள் ஜெபம் செய்தவாறு வராகியை வழிபட்டு வந்தால், வீடுகளில் உள்ள தீய சக்திகள் அஞ்சி ஓடும்.

வராகி தேவிக்குரிய உணவுகள் அனைத்தும் மூலிகைசத்து நிறைந்ததாக இருப்பதால் இவளை வழிபடும் போது எந்த வித நோய்த் தொற்றும், கிருமிகள் கூட நெருங்காது.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



# கார்த்தவீர்யார்ஜுனன்

## இழந்த பொருட்கள், சொந்தங்களை மீட்க வழிபட வேண்டிய தெய்வம்

நமது பாரத புண்ணிய பூமியில் எண்ணற்ற ஆச்சர்யமூட்டும் அதிசயத்தக்க நிகழ்வுகள் பொதிந்து உள்ளன. அப்படி ஒரு கதாபாத்திரம் கார்த்தவீர்யார்ஜுனன்.

க்ருத யுகத்தில் உலகம் நன்முறையில் இயங்க மகாவிஷ்ணுவின் சுதர்சனச் சக்கரத்தின் அம்சமாகப் பிறந்தவன். தத்தாத்ரேயர் உபதேசம் செய்த 'சப்தமி ஸ்நபனம்' என்னும் விரதத்தை அனுஷ்டித்து பிறந்தவன். இவன் ஒரு சிறந்த கணபதி உபாசகன் ஆவான். ஸ்ரீ விக்னேஸ்வர பெருமானின் ப்ரத்யக்ஷ தரிசனம் பெற்றவன்.

ஹைஹய வம்சத்தின் மாபெரும் சக்கரவர்த்தி கிருதவீர்யன் மகன். வேத சகாப்தத்தின் மிக நீண்ட ஆளும் சக்கரவர்த்தி சாம்ராட் ஆவார். மகிஷ்மதி நகரத்தை கைப்பற்றி அதை தனது கோட்டை தலைநகராக மாற்றி பெரும் அரசாட்சி புரிந்தான். மகாபாரதம் அவரை ஒரு சிறந்த போர்வீரன் என்று குறிப்பிடுகிறது. தியாகங்கள், தொண்டு, கற்றல், சிக்கனம், போர்க்கள சாதனைகள், வலிமை, கருணை, தாராள மனப்பான்மை அல்லது சக்தி ஆகியவற்றில் அவருக்கு போட்டியாக யாரும் இல்லை என்று கூறப்படுகிறது.

கார்த்தவீர்யனின் குரு ஸ்ரீ தத்தாத்ரேயர். கார்த்தவீர்யார்ஜுனன் பகவான் ஸ்ரீ விஷ்ணு தத்தாத்ரேயராக அவதாரம் எடுத்த போது, அவரது தரிசனத்தைப் பெற்றவன். அவரிடம் பகவான் ஸ்ரீ விஷ்ணுவின் திருக்கையாலேயே மரணமடைய வேண்டும் என்ற வரத்தை கேட்டு வாங்கிய மாபெரும் விஷ்ணு பக்தன். குரு தத்தாத்ரேயரிடம் அவன் பணிவுடன் வேத சாஸ்திரங்களைக் கற்று வந்தான். அவனின் குரு பக்தியில் நெகிழ்ந்த ஸ்ரீ தத்தாத்ரேயர், ஆயிரம் கைகளின் பலத்தை அருளினார். உன்னை வெல்லுவது எவனுக்கும் இயலாது என்று வரம் அளித்தார்.

அவரிடம் நான்கு அற்புதமான வரங்களை பெற்றார்.

❖ விரும்பிய போதெல்லாம் ஆயிரம் கைகள் வரும் வரம்.

❖ இவரது ராஜ்யத்தில் யாராவது அதர்மம் செய்ய நினைத்தால் அவர்கள் பயமடைந்து அந்த எண்ணத்தைக் கைவிட்டுவிடும் வரம்.

❖ எல்லா உலகங்களையும் வென்று அரசாளும் வரம்.

❖ இவரை யுத்தத்தில் எதிர்ப்பவர்களை விட இவரிடத்தில் அதிகமான சேனை வீரர்கள் உருவாகும் வரம்.

இலங்கை வேந்தனையாகிய தசமுக ராவணனையே போரில் வென்ற அளவற்ற பராக்கிரமசாலி, தீரன், அசகாய சூரன். கார்த்தவீர்யார்ஜுனன் ராவணனை வீழ்த்தியதோடு மட்டுமில்லாமல் அவனை ஒரு கயிறால் கட்டி, தனது நகரத்தில் இருப்பவர்களுக்கு ''இதோ பாருங்கள் பத்துத் தலைப் பூச்சியை'' என்று வேடிக்கை காண்பித்தான். பின்னர் ராவணனின் தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்கி அவனை விடு தலை செய்தார்.

கார்த்தவீர்யார்ஜுனன் ஒரு முறை வேட்டையாடி விட்டு, பரசுராமரின் தந்தையான ஜமதக்னியின் ஆசிரமத்திற்கு வந்தான். அவனுக்கும் அவனது படையினருக்கும் ஜமதக்னி முனிவர் தன்னிடமிருந்த காமதேனுவின் துணைக் கொண்டு அமோகமாக விருந்து படைத்தார். அதைக் கண்ட கார்த்தவீர்யார்ஜுனன், தனக்கு அந்த காமதேனு வேண்டுமென்றான். காமதேனு முனிவர்களின் தனிச்சொத்து என்றார் முனிவர்.

பிறகென்ன பெரிய யுத்தமே வந்தது. காமதேனுவினிடமிருந்து ஆயிரமாயிரமாக வீரர்கள் தோன்றினார்கள். கார்த்தவீர்யார்ஜுனன் சேனை அனைத்தும் நிர்மூலமானது. கோபமடைந்த கார்த்தவீர்யார்ஜுனன் ஜமதக்னியைக் கொன்று விட்டு, காமதேனுவின் கன்றைக் கவர்ந்து சென்றுவிட்டான்.

தன் தந்தையின் இந்நிலைக்கு காரணம், கார்த்தவீர்யார்ஜுனன் தான் என்று உணர்ந்த பரசுராமர் அவனை எதிர்த்துப் போருக்குச் சென்றார்.

அவனுடைய படை அனைத்தையும் த்வம்சம் செய்தார் பரசுராமர். இதனால் கோபம் கொண்ட கார்த்தவீர்யார்ஜுனன், போர்க்களத்திற்கு வந்து பரசுராமரைக் கண்டபடி தாக்கினான்.

அவன் செலுத்திய பாணங்கள், பரசுராமரை ஒன்றும் செய்யவில்லை. மாறாக பரசுராமர் விட்ட பாணங்கள் அனைத்தும், அவனது ஆயிரம் மலைப் போன்ற கரங்களையும் பூவைக் கொய்வது போல வெட்டி வீழ்த்தியது. அப்போது தான் அவன் தன் முன்னால் நிற்பது, சாட்சாத் பரம்பொருளே என்பதை உணர்ந்தான்.

பின்பு ஒரு நொடி கூடத் தாமதிக்காமல், பரசுராமரின் பாதத்தில் கார்த்தவீர்யார்ஜுனன் சரணாகதி அடைந்தான். அவனின் விருப்பப்படி ஸ்ரீமன் நாராயணன் அவதாரமாகிய பார்கவ ராமன் என்னும் பரசுராமரிடம் மடிந்தான் அதன் விளைவாக பரசுராமர் 21 க்ஷத்ரிய வம்சத்தை அழித்து தனது பகையை தீர்த்து கொண்டார். இறுதியாக ரகுகுல திலகன் ஸ்ரீ ராமனிடம் சரண் அடைந்தார்.

தமிழ்நாட்டில் இவரை ஒரே ஒரு ஆலயத்தில் மட்டுமே பார்க்கலாம். கும்பகோணம் மாவட்டம் குடவாசலில் இருந்து 4 கி.மீ தூரத்தில் சேங்காலிபுரம் என்னும் ஊர் உள்ளது. அங்குள்ள ஆலயத்தில் இவரது விக்ரகம் உள்ளது. அங்கு சென்று இவருக்கு பூஜை செய்து மந்திரம் ஜெபித்து வேண்டிக்கொள்வது சிறப்பான பலனைத் தரும். வாலாஜாபேட்டையிலும் உள்ளது இவருக்கான சன்னிதி உள்ளது. காஞ்சிபுரத்திலுள்ள பாண்டுரங்கஸ்வாமி கோவிலில் கார்த்தவீர்யார்ஜுனர் சன்னிதி உள்ளது.

கார்த்தவீர்யார்ஜுனன் ஹோமம் செய்யப்படுவதின் பிரதான நோக்கமே இழந்த நமது பூர்வீக சொத்துக்களையும், பொருட்களையும் திரும்ப மீட்பதற்காக தான். வேதம் அறிந்த வேதியர்களைக் கொண்டு இந்த ஹோமம் செய்யப்படுவதால் நம்மை வஞ்சித்து பிறர் பெற்றுக்கொண்ட சொத்துக்கள், நம்மை அறியாமல் நாம் தொலைத்த அல்லது திருடப்பட்ட பொருட்கள் போன்றவை விரைவில் நமக்கு திரும்ப கிடைக்கச் செய்யும்.

இழந்த பொருட்கள், சொத்துக்கள் போன்றவை அப்படியே நமக்கு திரும்ப கிடைக்காவிட்டாலும் அதற்கிணையான செல்வம் நமக்கு கிடைக்க வழிவகை செய்கிறது. அதேபோன்று சில குடும்பங்களில் சில நபர்கள் மிக இளம் வயதிலோ அல்லது பல்வேறு காரணங்களால் காணாமல் போவது, பிரிந்து செல்லும் நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களை மீண்டும் தொலைந்த தங்களின் உறவுகளோடு சேர்க்க செய்யும் ஆற்றல் மிக்க ஹோம பூஜையாக கார்த்தவீர்யார்ஜுன ஹோமம் இருக்கிறது.

ஓம் ஹ்ரீம் ரோம் கார்த்த வீர்யார்ஜுனாய நம
கார்த்த வீர்யார்ஜுனோ நமஹ
ராஜா பாஹு சஹஸ்ரவாந்
தஸ்ய ஸமரந மாத்ரேனா
கதம் நஷ்டம் ச லப்யதே

கதம் என்ற சொல்லின் முன்னால் காணாமல் போன நபர் அல்லது பொருளின் பெயர் சேர்த்து ஜெபிக்க வேண்டும்.

ஸ்ரீ கார்த்தவீர்யர் காயத்ரீ மந்திரம்
ஓம் கார்த்தவீர்யாய வித்மஹே
மஹாரூஷ்மாய தீமஹி
தந்நோஸ்ர்ஜுநஹ் ப்ரசோதயாத்

இவரை வழிபடுபவர்களுக்கும், இவர் சரிதத்தைப் படிப்பவர்கள், கேட்பவர்கள் யாவருக்கும் பெரும் நன்மை உண்டாகும். செவ்வாய் அல்லது புதன்கிழமைகளில் இவரை வழிபடச் சிறப்பு.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593

# அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில்



## ஆடி அமாவாசையன்று வழிபடவேண்டிய தலம்





மாதம் தோறும் அமாவாசை வந்தாலும் ஆடி, புரட்டாசி, தை மாதங்களில் வரும் அமாவாசை மிகவும் சிறப்பு பெற்றதாக கொண்டாடப்பட்டு வருகிறது.

பொதுவாக அமாவாசை வழிபாடு என்பது முன்னோர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்யப்படும் வழிபாடாகும்.

அந்த வகையில் ஆடி மாதம் அமாவாசைக்கு அவசியம் சென்று தரிசிக்க வேண்டிய திருத்தலத்தைப் பற்றி பார்ப்போம்.

ஆடி அமாவாசைக்கு சிறப்பு பெற்ற திருத்தலமாக திகழ்வது அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயில், இத்திருக்கோயில் தஞ்சை மாவட்டத்திலிருந்து, திருப்பந்துருத்தி அஞ்சல் திருவையாறு வட்டத்தில் உள்ளது.

இத்தலத்திற்கு பல்வேறு சிறப்புகள் உள் ளன. தேவர்கள் முனிவர்கள் போன்றோரின் சாபங்களைக் நிவர்த்தி செய்துள்ள திருத்தல மாகும்.

இத்தலத்து மூலவரை புஷ்பவனேஸ்வரர், ஆதிபுராணர், பொய்யிலியர் என்று அழைக்கப் படுகிறார்.

தாயார் சௌந்தரநாயகி, அழகாலமர்ந்த நாயகி என்று அழைக்கப்படுகிறார். இத்தலத்தின் விருட்சமாக வில்வமரம் உள்ளது.

ஒரே தலமாக இருந்தாலும் பல தீர்த்தங்கள் உள்ளது. சூரியதீர்த்தம், காசிபதீர்த்தம், கங்கை, காவிரி, அக்னி தீர்த்தம் என்று உள்ளது.

திருநாவுக்கரசர் , அருணகிரிநாதர், ராமலிங்க அடிகளாரால் பாடல் பெற்ற திருத்தலம் இது.

தேவாரப்பாடல் பெற்ற 274 சிவாலயங்களில் இது 74 வது தேவாரத்தலம் ஆகும். தேவார பாடல் பெற்ற காவிரி தென்கரை தலங்களில் இது 11வது தலம்.

திரர் தேவர் இயக்கர் விச்சாதரர் கருத
நின்றவர் காண்பரி தாயினான் பொருத
நீர்வரு பூந்துருத் திந்நகர்ச் சதுரன்
சேவடிக் கீழ்நாம் இருப்பதே

– திருநாவுக்கரசர்

என்று திருநாவுக்கரசரால் மிக அற்புதமாக குறிப்பிடப்பட்டுள்ள திருத்தலம் இது.



கீதா-ராஜன்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், இந்திரன்,





திருமால், லட்சுமி, சூரியன், காசிபர், கழுகு உருவம் பெற்ற விஞ்ஞயர், தேவர்கள், அகத்தியர் ஆகியோரால் வழிபட்ட திருத்தலமாகும்.

இந்திரன் கவுதமர் சாபத்தால் உடம்பெல்லாம் ஆயிரம் பெண் குறிகள் தோன்றி அகோரமாக காட்சிதந்தான், இந்திரன் தனக்கு ஏற்பட்ட சாபத்தை போக்கிக் கொள்ள இத்தலத்து ஈசனை மலர்களைக்கொண்டு வழிபாடு செய்து நோய் நீங்கி, மலர் போன்ற மென்மையான உடலை பெற்றான். இத்தலத்தின் சிறப்புகளில் இதுவும் ஒன்று.

### மலர் வழிபாடு:

தேவர்கள் எல்லோரும் மலர்கொண்டு இறைவனை இத்தலத்தில் வழிபட்டனர். திருமாலும், திருமகளும் இவ்வூர் இறைவனை வழிபட்டனர் என்பதை ராஜகோபுரத்தில் உள்ள சிற்பம் காட்டுகின்றது.

இத்தலத்து முருகப்பெருமானை அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளார். முருகப் பெருமான் இத்தலத்தில் ஒரு திருமுகத்துடனும் நான்கு திருக்கரங்களுடனும் தனது தேவியர் இருவருடன் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார்.

### கோவில் அமைப்பு:

இக்கோயில் சோழர்களால் கட்டப்பட்டது. அப்பரால் மடம் அமைக்கப்பட்ட சிறப்புடையது. இக்கோவிலின் இராஜ கோபுரம் ஐந்து நிலைகளுடன் கிழக்கு நோக்கியுள்ளது. இத்தலத்தில் சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். கோபுர வாயில் வழியே உள்ளே நுழைந்ததும் பஞ்சமூர்த்தி மண்டபம் உள்ளது. கொடிமரம் இல்லை. பலிபீடமும், நந்தி மண்டபம் மட்டும் உள்ளன. நந்தி மண்டபத்திலுள்ள பெரிய நந்தி இறைவன் சந்நிதிக்கு நேராக இல்லாமல் விலகியுள்ளது.

வெளிப் பிரகாரத்தில் வலதுபுறம் தெற்கு

# பித்ருசாபம் போக்கு ஒரே தீர்த்தம், 13 தீர்த்த பலன்




ஒருமுறை முனிவர்கள் பலர் ஒன்று கூடி பேசிக்கொண்டிருந்தனர். 'ஆடி அமாவாசை அன்று, வேதாரண்யம், தனுஷ்கோடி, சங்கமுகம், திருவேணி சங்கமம், கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, காவிரி, சிந்து, பிரம்மபுத்ரா, தாமிரபரணி, ராமேஸ்வரம் ஆகிய பதிமூன்று தீர்த்தங்களிலும் நீராடினால் பெரும் புண்ணியம் கிடைக்கும். பித்ரு சாபங்கள் விலகும்.

எனவே இந்த 13 புனித தீர்த்தங்களிலும் ஆடிஅமாவாசை அன்றைய தினத்தில் நீராடி வேண்டும் என்கின்றன புராணங்கள். ஆனால் யாரால் இது சாத்தியமாகும்?" என ஏக்கத்தில் பரிதவித்தபடி பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கிருந்த காசிப முனிவர், "ஏன் முடியாது?. நான் ஆடி அமாவாசை அன்று இந்த பதிமூன்று தீர்த்தங்களிலும் நீராடி, பிதுர் தர்ப்பணம் முடித்துக் காட்டுகிறேன்" என்றார்.

பின்னர் காசிப முனிவர், ஈசனை வேண்டி தவம் இயற்றி, பல சிவத்தலங்களுக்கு சென்று வழிபட்டு வந்தார். பின்பு திருப்பூந்துருத்தி வந்தடைந்தார்.

அங்கும் ஈசனை வேண்டி தவம் இருந்தார். அவரது தவத்தை மெச்சிய ஈசன், ஆடி அமாவாசை அன்று காசிபருக்கு திருக்காட்சி கொடுத்தார். காசிபரின் வேண்டுகோளுக்கிணங்க 13 புனித தீர்த்தங்களையும், ஒரேஇடத்தில் (திருப்பூந்துருத்தியில்) பாயும்படிச் செய்தார்.

அந்தத் தீர்த்தம் தற்போது, காசிப தீர்த்தம் என்றே அழைக்கப்படுகிறது. காசிபர் அந்த புனித நீரில் நீராடி, ஈசனையும், அம்பாளையும் அந்த நீரால் அபிஷேகம் செய்து வழிபட்டார். அதன்காரணமாக அவருக்கு ஈசனுடன் ஐக்கியமாகும் முக்திநிலை கிடைத்ததாக அத்திருக்கோவில் தலபுராணம் கூறுகிறது.

அதனால் ஆண்டுதோறும் ஆடி அமாவாசை அன்று, இவ்வாலயத்தில் திருவிழா நடத்தப்படுகிறது.

அன்றைய தினம் காசிப தீர்த்தத்தில் நீராடி, 13 புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய முழுப் பலனும் கிடைக்கும். மேலும் இத்தலத்தை கிரிவலம் வந்து ஈசனையும், உமையாளையும் வழிபட்டால், பித்ரு சாபங்கள் தீர்வதுடன், குல தெய்வத்தின் அருளும் பரிபூரணமாய் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

நோக்கிய அம்பாள் சந்நிதி உள்ளது. இரண்டாவது உள்வாயிலைத் தாண்டியதும் வசந்த மண்டபம். கொடிமரம், பலிபீடம், உள்ளன.

## விலகிய நந்தி:

அப்பர் உழவாரத்தொண்டு செய்த தலமென்று எண்ணி, காலால் மிதிக்கவும் அஞ்சி வெளியில் நின்ற ஞானசம்பந்தருக்கு இறைவன் நந்தியை விலகச் செய்து காட்சி தந்ததாகத் தலபுராணம் கூறுகிறது, இன்றும் இங்குள்ள நந்தி சற்று விலகியவாறு உள்ளது.

சுவாமி சந்நிதிக்குத் தென்புறம் சோமாஸ்கந்த மண்டபமும் அடுத்து நடராச சபையுமுள்ளது. உள் பிராகாரத்தில் விநாயகர், சப்தமாதர்கள், நால்வர் சந்நிதிகள் உள்ளன. மகா மண்டபம், அர்த்த மண்டபம் கடந்து கருவறையில் மூலவர் புஷ்பவன நாதர் எழுந்தருளியுள்ளார். கோஷ்டமூர்த்தங்களில் வீணாதர தட்சிணாமூர்த்தி திருமேனி மிகவும் சிறப்பானது. மேற்கு கோஷ்டத்தில் அர்த்தநாரீஸ்வரர் உள்ளார். ஒற்றைக் காலில் நின்று தவம் செய்யும் துர்க்கையும், அமர்ந்த கோலத்தில் அப்பர்பெருமானும், அருகில் பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியார்



ஆகிய இரு மனைவியருடன் சுந்தரர் இருக்கும் உருவங்கள் காணத்தக்கன.

## சிறப்புக்கள்:

பித்ரு சாபம் நீங்க அமாவாசையன்று கிரிவலம் வந்து இறைவனைவழிபட்டால் சாபம் நீங்கும் என்பது நம்பிக்கை.

திருமணம் நடைபெறவும், குழந்தை பாக்கியம் வேண்டியும், கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கவும் இங்குள்ள சன்னதிகளில் தீபம் ஏற்றி பிரார்த்தனை செய்கின்றனர்.

இத் தலத்தில் ஆடி அமாவாசை அன்று 18 முறை கிரிவலமாக வந்து ஈசனையும், உமையாளையும் வழிபட்டால், பித்ரு சாபங்கள் தீர்வதுடன், குல தெய்வத்தின் அருளும் பரி பூரணமாய் கிடைக்கும் என்பதும் பக்தர்களின் நம்பிக்கை.

முற்காலத்தில் அகத்தியரின் கமண்டலத்தில் அடைபட்ட காவேரியை விநாயகர் காகம் வடிவில் வந்து கவிழ்க்க, அதிலிருந்து தோன்றிய காவிரி ஆறாக கிழக்கு நோக்கி ஓடி, செந்தலையிலிருந்து அந்திலி, வெள்ளாம்பிரம்பூர், ஆற்காடு, கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருப்பழனம், திருவையாறு, திருநெய்த்தானம், சாத்தனூர் வரை சூழ்ந்தது, இடைப்பட்ட இடங்களில் கடல் போல் தேங்கி நின்றுவிட்டது.

இதற்கிடையில் உள்ள கோனேரிராஜபுரம், கருப்பூர், நடுக்காவேரி, திருவாலம்பொழில், திருப்பூந்துருத்தி முதலிய ஊர்கள் எல்லாம் நீர் நிலையில் மூழ்கி இருந்தன.

இந்திரன் ஐயாறப்பரை வழிபட்டு காவிரியை அவர் அருளால் கிழக்கு நோக்கி அழைத்துச் சென்று கழுமலப் பூங்காவை வளப்படுத்தினான்.

அவ்வாறு காவிரி கிழக்கு நோக்கி ஓடுகையில் முதலில் காணப்பட்ட நிலப்பகுதி கண்டியூர். பின்னர் ஆற்று வண்டலும் மணலும் படிந்ததாய் தோன்றியது திருப்பூந்துருத்தி.

அதற்கு மேற்கே ஆலமரம் இருந்ததாக காவிரி எக்கல் நிறைந்து மேடிட்ட பகுதி நிலம் மென்மையாக பூப்போல இருந்ததாலும், மலர் வாட்டத்தில் நிலம் அமைந்திருந்ததாலும் இந்நிலப்பரப்பை "பூந்துருத்தி" என்று அழைக்கப்பட்டது என்று கூறுவர்.

மேலும், தேவர்கள் எல்லோரும் மலர்கொண்டு இறைவனை இத்தலத்தில் வழிபட்டதால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

திருமழபாடி நந்திதேவர் திருமணத்திற்கு மலர்கள் தந்து உதவியதாகவும் அதற்கு நந்திதேவர் வந்து நன்றி கூறிவதாகவும் அமைந்த விழாவே "ஏழூர் வலம் வரும் விழா' (சப்த ஸ்தான விழா) என்பர். இத்தலத்தில் இந்த விழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இத்தலத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும். +91 97911 38256

**கீதா–ராஜன்**, சென்னை
தொடர்பு எண்: 8825844033

# இறைவனை அனுபவிக்க ஆன்ம அனுபூதி அவசியம்

86
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக



அன்பு குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: விஞ்ஞான அறிவு உண்மைகளின் அடிப்படையில் வளர்க்கப்பட்டுள்ளது. மருத்துவத்துறை இன்னும் குறிப்பிட்ட வியாதிகளுக்கு காரணங்களும் நிவாரணங்களும், இனிமேல்தான் கண்டுபிடிக்கப்படவேண்டுமென்றாலும் மிக நன்றாகவே பெருமளவில் வளர்த்துள்ளது. ஆனால் விஞ்ஞானம் எதை அறிந்திருக்கிறதோ அல்லது எவையெல்லாம் பற்றி அது கிட்டத் தட்ட நிச்சயமாக இருக்கிறதோ என்றால் அவற்றைப்பற்றிய காரணிகள் எல்லாம் சோதிக்கப்பட்டவையால்தான். கோட்பாடுகள் சோதிக்கப்பட்டு மெய்பிக்கப்பட்டுள்ளன. மதவிஷயத்தில் இது வேறுபட்டது. மக்களுக்கு குறிப்பிட்ட செய்திகள் அல்லது உண்மைகள் அளிக்கப்பட்டு அவற்றை நம்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. சிறிதுகாலம் கழித்து அவர்களது நம்பிக்கை நிறைவேற்றப்பட வில்லையென்றால், ஐயம் மெதுவாக உள்ளே நுழைகிறது. பிறகு அவர்கள் நிரூபணத்தைக் காணும் முயற்சியில் மதத்திலிருந்து மதம் தாவுகிறார்கள். தேவாலயங்கள் மற்றும் கோயில்களில் நீங்கள் இறைவனைப்பற்றி கேள்விப்படுகிறீர்கள்; புத்தங்களில் அவனைப் பற்றி படிக்கலாம்; ஆனால் இறைவனை நீங்கள் குறிப்பிட்ட விஞ்ஞானபூர்வமான உத்திகளைப் பயிற்சி செய்தபின்னர் அடையப்பெறும் ஆன்ம அனுபூதி மூலம்தான் அனுபவிக்கமுடியும். இந்தியாவில், மதம் இத்தகைய விஞ்ஞான வழிமுறைகளின் அடிப்படையிலுள்ளது. அனுபூதி என்பதில்தான் இந்தியா நிபுணத்துவம் பெற்றுள்ளது. மேலும் இறைவனை அறிய விரும்புபவர்கள் இந்தியாவின் வழிமுறைகளை அவசியம் பின்பற்றவேண்டும். அவை இந்தியாவின் தனிப்பட்டசொத்தல்ல. மின்சாரம் மேற்கில் கண்டுபிடிக்கப்பட்டு இந்தியாவில் நாம் அதனால் பயனடைவதுபோல், இறைவனை அறியும் வழிகளை இந்தியா கண்டுபிடித்திருக்கிறது. மேற்கு அதனால் பயன் பெறவேண்டும். பரிசோதனைகள் மூலம் இந்தியா சமயத்திலுள்ள உண்மைகளை நிரூபித்திருக்கிறது. எதிர்காலத் தில் எல்லாயிடத்திலும் சமயம் (மதம்) ஒரு பரிசோதனைக்குரிய விஷயமாக இருக்கும். அது வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் இருக்காது.”


குருப்ரியா

மேலும் அவர் கூறுகிறார்: “லட்சக்கணக்கான மக்கள் ஒரு தேவாலயத்திலிருந்து மற்றொன்றிற்கு தாங்கள் இறைவனைக் குறித்து கேள்விப்பட்டதைப்பற்றி தங்கள் உள்ளங்களில் உண்மையான நம்பிக்கை கொள்ளாமல் மாறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: “நான் பிரார்த்தனை செய்கிறேன், ஆனால் பெரும்பாலான நேரங்களில் அவன் பதிலளிப்பதில்லை.” இருப்பினும் இறைவன் எப்பொழுதும் நம்மைப்பற்றி அறிந்தவனாகவே இருக்கிறான். அவனுக்கு நம்மைப்பற்றிய எல்லாம் தெரியும். ஆயினும் நாம் அவனைப்பற்றி முழுவதுமாக அறியாமையில் நீடித்திருக்கிறோம்., இதுதான் நமது மனங்களை குழப்பும் பலவிதமான ஐயங்களின் காரணம். இறைவன் இருக்கிறா னென்றால், அவனை நாம் அறியமுடிய வேண்டும். ஏன் நாம் வெறுமனே அவனைப் பற்றிப் படித்து, வாதங்களைக் கேட்டுக் கொண்டேயிருந்து இன்னும் சொந்த அனுபவத்தில் அவனைப்பற்றி எதுவுமே அறியாதிருக்கவேண்டும்?”

“இருப்பினும் இறைவனை உணர ஒரு திட்டவட்டமான வழி உள்ளது. அது என்ன வழி? அது சமய உண்மைகளுடன் விஞ் ஞான ரீதியான பரிசோதனை, நீங்கள் நம்புவதைப் பயிற்சி செய்து பாருங்கள். மதத்தைப் பயிற்சிக்கு உள்ளாக்கி, அதை ஒரு விஞ்ஞானமாக உங்கள் மீது பரிசோதனை செய்து நிரூபிக்கப் பபயன்படுத்துதல் சாத்தியமே. சத்தியத்திற்கான தேடல்தான் உலகத்திலேயே மிக அற்புதமான தேடலாகும். வெறுமனே ஞாயிற்றுக்கிழமை சமயக்கூட்டத்தில் கலந்துகொண்டோ அல்லது ஒரு பூஜையை செய்துகொண்டோ இருப்பதற்குப் பதிலாக, மதமானது ஒரு நடைமுறைத் தன்மையைப் பெற்றிருக்க வேண்டும். சமய லட்சியங்களையொட்டி எவ்வாறு உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்பதைப் பயிலுங்கள். நடைமுறைப் பயன்பாடு இல்லாமல் மதத்திற்கு எந்த மதிப்பும் இல்லை.

குருதேவர் தன்னுடைய ஓர் அனுபவத்தைக் கூறுகிறார்: “ இந்த இடத்திற்கு அருகில் ஒரு பெரிய

பண்ணைக்கு சொந்தக்காரனாயிருந்த ஒரு மனிதன் மிகவும் லோகாயதவாதியாக இருந்தார். நான் அவரை அவ்வப்போது என்ஸினிடனுக்கு வருமாறு தூண்டினேன். அவரும் அவ்வாறே செய்தார். முதல் சில வருகைகளுக்குப் பிறகு அவர், கண்களில் கண்ணீர் ததும்பக் கூறினார், "நான் இறைவனின் இருப்பை இந்த அளவிற்கு வெறும் சூழ்நிலைகூட பேசக்கூடிய ஓர் இடம் இருக்கிறது என்பதை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை." பார்த்தீர்களா, மதம் நடைமுறைக்கேற்றதாக இருக்கவேண்டும். அது உங்களுக்குள் உங்கள் உணர்வுநிலையில் மற்றும் உங்கள் நடத்தையில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். இங்கு முறைதவறாது வழக்கமாக வருபவர்கள் தங்களது வாழ்க்கை முறையை உயர்ந்தவிதத்தில் மாற்றிக்கொண்டுள்ளனர். இந்த சூழ்நிலையில் அவர்கள் ஆன்மீகமாகத் தாக்கமடைந்து கொண்டிருக்கின்றனர். எனவே மதமானது அதை நிரூபிக்கவும் மற்றும் நடைமுறையாக்கவும் பரிசோதிக்கப்படவேண்டும். அநேக தேவாலயங்கள் பெரிய அளவில் சமூகநன்மையை புரிகின்றன. ஆனால் அவை உங்களுக்கு நீங்களே எப்படி இறைவனை நிரூபித்துக்கொள்ள முடியும் என்றும் எவ்வாறு நீங்கள் அவனுடன் ஒத்திசைந்திருப்பது என்றும் காட்டுவதில்லை."

"நூல்களைப் படித்தாலும் வாதங்களைக் கேட்டாலும் நல்லதுதான். ஆனால் ஒவ்வொருவரும் சொந்த அனுபவம் மூலமாக இறைவனைப் பற்றிய அறிவு பெறவேண்டும்." என்று குருதேவர் எடுத்துரைக்கிறார். இறைவனை அறிந்தால் மட்டும் போதாது. இறை அனுபூதி பெறவேண்டும். அப்பொழுதுதான் இறைவனை அனுபவிக்கமுடியும் என்கிறார் குருதேவர். ஒரு பிறவி முழுவதும் வாழ்க்கையில் என்னென்ன அனுபவங்களைக் காண்கிறோம்; அனுபவிக்கிறோம். அவற்றையெல்லாம் அனுபவித்து சலிப்பு ஏற்பட்டுவிட்டது. வாழ்வு நம் மனதிற்கு திருப்தி அளிக்கவில்லை. இதற்குமேல் வேறு ஏதோ ஒன்று இருக்கவேண்டும். மனம் திருப்தி அடையவேண்டும்; அமைதி பெறவேண்டும் என்று கூறுகிறார்களே! அது எவ்வாறு கிடைக்கப்பெறுவது? அது எவ்வாறு அடைய முடியும்? விஞ்ஞானமுறையிலான உத்திகளைப்பயின்றால் அதன் பின்னர் ஆன்மஅனுபூதி மூலம் இறைவனை அனுபவிக்கலாம் என்கிறார் குருதேவர். மதம் என்பது இறைவனின் தொடர்புடையது. மதக்கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ளவேண்டும். பின்னர் அவற்றை கடைபிடிக்கவேண்டும். இதனால் ஏதோ உண்மைகள் இருக்கிறது. அதனால்தான் மகான்கள் கூறும் போதனைகளைக் கேட்டு அவற்றைக் கடைபிடித்து உணர்ந்தறிய வேண்டும் என்பது. அனைத்திற்கும் மேலான இறை அனுபூதி பெற்றால்தான் இறைவனை அனுபவிக்கமுடியும். ஜீவன் பரமபுருஷனான இறைவனுடன் சேர்ந்து அனுபூதியை அனுபவிப்பதற்காக உள்ள ஞானம் இதிலிருந்து கிடைக்கிறது என்பதற்காக பகவத்கீதையில் பதினைந்தாவது அத்தியாயத்தை புருஷோத்தம யோகம் என்று பொருள்படுத்தப்பட்டுள்ளது. பகவத்கீதையில் 18வது அத்தியாயத்தில் கூறுவது என்னவென்றால் ஆன்ம அனுபூதியைப் பெறப்போகும் ஒரு யோகி முதலில் எல்லா கர்ம பந்தங்களிலிருந்து விடுதலை அடைவான். இதற்குக் காரணம் ஞானநிஷ்டையேதான். அனைத்து ஆசைகளையும் துறப்பதன் காரணம் ஞானநிஷ்டை கைவரப்பெறுகிறதால்தான். அவ்வாறு பிரம்மத்தை உணர்ந்த ஒருவர் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார். ஆசை, துக்கம், குரோதம், பயம் போன்றவை பின்னர் அவரிடம் ஏற்படாது. அனைத்துயிர்களையும் அவர் இறைஸ்வரூபமாகக் காண்பார். அப்பொழுது அவர் அனைவரையும் இறைவனாக பாவிப்பார்; ஆதரிப்பார்; சேவிப்பார்.

நூல்களைப் படித்தாலும் வாதங்களைக் கேட்டாலும் நல்லதுதான். ஆனால் ஒவ்வொருவரும் சொந்த அனுபவம் மூலமாக இறைவனைப் பற்றிய அறிவு பெறவேண்டும்.

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்



பொம்மலாட்டக்காரன்,பொம்மைகளை முன்னில் நிறுத்தி, பின்னால் மறைந்திருப்பது போன்று இதயத்திற்குள் பரமபுருஷனான இறைவன் மறைந்திருக்கிறான். நூலைப்பிடித்து இழுத்து உயிரற்ற பொம்மைகளை அசைப்பது போன்று இறைவன் கர்மமாகின்ற நூலினை பிடித்து இழுத்து ஜீவாத்மாக்களாகின்ற மனிதர்களை தங்களுடைய கர்மங்களைச் செய்வித்துக்கொண்டிருக்கின்றான். பொம்மைகள், எவ்வாறு அந்த விளையாட்டைச் செய்விக்கின்றவனின் நூல் இழுப்புக்கு இணங்குகின்றன. அது போன்ற ஜீவாத்மாக்களும் இறைவனால் செய்விக்கின்ற கர்மங்களுக்கு இணங்குகின்றன. அதனைத் தடைய யாராலும் முடியாது. அர்ஜுனா! அவ்வாறு இதயத்திற்குள் ஆத்ம ஸ்வரூபமாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற பரமபுருஷனான அந்த இறைவனை நீ சரணடைவாய்? அவ்வாறு நீ செய்தாயானால் நிச்சயமாக நீ இறைவனின் அருளுக்குப் பாத்திரமாவாய்! இறைவனின் அருளால் மேலான சாந்தியையும் சாசுவதமான கைவல்லியத்தையும் நீ அடையலாம். (பகவத் கீதை அத் 18 ஸ்லோகம் 51, 52,. 61, 62)

பகவத் கீதையில் கூறியவாறு ஒருவன் இறைவனைச் சரணடைந்து குருதேவரின் மகிமையேறிய போதனைகளைக் கேட்டுக் கடைபிடித்தால் நிச்சயம் ஆன்ம அனுபூதியை பெறலாம். அதற்கு மனிதனின் மனம்தான் முக்கியம். அது செம்மையாக இருந்தால் எல்லாம் சரியாகவே நடக்கும். ஆனால் அது அவ்வப்போது மாயைக்குள் புகும். அதற்கு இடம் கொடுக்காமலிருக்க வேண்டும். அவ்வாறு நேர்ந்தால் எந்த இடத்தில் தவறு நடந்தது என்பதை ஆராய்ந்து அத்தவறு மீண்டும் ஏற்படாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். தனக்குத்தானே சாட்டையடி கொடுத்து அவ்வாறான தவறுகளுக்கு உணவு கொடுக்காமல் பட்டினிபோட வேண்டும். அப்படியென்றால் அது போன்ற தவறுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனப்பொருள். இவ்வாறு செய்கின்ற ஒருவன் ஆன்ம அனுபூதி பெற்று இறைவனை அனுபவிக்கலாம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909



# சாதுர்மாஸ்ய விரதம்

இந்து சமயத்தில் சாதுர்மாஸ்ய விரதம் என்பது துறவிகள் மழைக்காலமான ஆடி மாத பௌர்ணமி முதல் கார்த்திகை மாத பௌர்ணமி வரை, நான்கு மாதங்கள் ஒரே இடத்தில் தங்கி, வேத வேதாந்தங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்வார்கள். இந்த மாதங்களில் துறவிகள் உணவு முறையில் சில கட்டுப்பாடுகளை வகுத்துக் கொள்வார்கள். முதல் மாதம் உணவில் காயும் பழங்களும் இருக்கும். இரண்டாம் மாதம் பால் தவிர்ப்பார்கள். மூன்றாம் மாதம் தயிரை தவிர்ப்பார்கள். நான்காம் மாதம் பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்.

துறவிகள், வெளியூர்களுக்குச் சென்றால் ஓர் இரவுக்கு மேல் தங்கக் கூடாது. அதிகபட்சம் மூன்று நாள் தங்கலாம் என்றாலும், மழை மாதத்தில் ஒரே இடத்தில் நான்கு மாதங்கள் தங்கி இருக்க வேண்டும் என்கிறது சாஸ்திரங்கள். ஏனெனில், மழைக் காலத்தில்தான் பூச்சி, புழுக்கள் உட்பட ஊர்வனவை வெளியில் வரும். அவற்றைத் தெரியாமல் காலால் மிதித்துக் கொன்றுவிடும் பாவத்தைக் கூட துறவிகள் செய்யக்கூடாது என்பதற்காகவே இந்த விதிவிலக்கு.

இல்லறத்தார், சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொண்ட பீடாதிபதிகள் ஒருவரையாவது இந்த நான்கு மாதத்தில் ஒரு முறையேனும் சென்று தரிசிக்க வேண்டும். த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் ஆகிய கோட்பாடுகளை முறையே கைக்கொண்ட, ஆனந்த தீர்த்தர் என்ற மத்வர், ஆதிசங்கரர், ராமானுஜர் ஆகியோர் வழி வந்தவர்கள் அனைவரும் இந்த சாதுர்மாஸ்ய விரதம் மேற்கொள்வார்கள்.

அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் (சூரிய உதயத்திற்கு 1 ½ மணி நேரத்திற்கு முன்பு) எழுந்து குளித்த பிறகு, மங்கள ஆரத்தி செய்து அதன் பின்னர் ஈஸ்வர த்யானம் அதாவது நமசிவாய /நாராயண மஹாமந்திரத்தை ஜபம் செய்ய வேண்டும்.

பிரம்மசரிய விரதம் அனுஷ்டித்தல் அவசியம்.

பின்வரும் நன்கு முக்யமான விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்:

(1) மது அருந்தாமை

(2) தகாத பாலுறவில் ஈடுபடாமை

(3) மாமிசம் உண்ணாமை

(4) சூதாடாமை

உங்களுக்குப் பிடித்தமான உணவு வகையினை இந்த மாதங்களில் கைவிடுதல் நன்று. நல்ல உடல் ஆரோக்கியம் இருந்தால், தினசரி ஒருவேளை மட்டும் சாப்பிடுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

விரத காலங்களில் அசைவம் உண்ணக்கூடாது

சிரவண மாதத்தில் கீரை உண்ணக்கூடாது.

பாத்ர மாத்தில் தயிர் உண்ணக்கூடாது.

ஆஸ்வின மாதத்தில் பால் அருந்தக் கூடாது.

கார்த்திக மாதத்தில் மீன், மாமிசம், மற்றும் இதர அசைவ பொருட்களை மற்றும் மசூர் பருப்பும் உளுத்தம் பருப்பும் உண்ணக் கூடாது.

துளசி தேவிக்கு தினமும் ஆரத்தி செய்து கீர்த்தனம் பாடி ஸ்ரீமன் நாராயணனை முறைப்படி பிரார்த்தனை செய்யவும்.

தூய பக்தர்களுக்கு தானம் வழங்குதல் நன்று.

தினமும் சுவையான பதார்த்தங்களைப் படைத்து பரமாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணருக்கு நைவேத்தியம் செய்யுங்கள்.

விஷ்ணு சஹஸ்ரநாமம், ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீ குரு சரித்ரம், ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் சுந்தர காண்டம், ஸ்ரீ ருத்ர பாராயணங்கள், அதி விசேஷம் மற்றும் பல மடங்கு புண்ணியம் அளிக்கும். ஸ்ரீமன் நாராயணன் தரிசனம் நிச்சயம் கிடைக்கும். நம் நாடு முழுவதும் சாதுர்மாஸ்ய வ்ரத காலத்தில் ஆயிரக்கணக்கான இடங்களில் பாகவதம் படிக்கப் படுகிறது. பாகவத ஸப்தாஹம் நடத்தப் படுகிறது.

ஆயிரம் விஷ்ணு நாமங்கள் ஒரு ராம நாமத்துக்கு சமம் என்றும், மூன்று ராம நாமம் ஒரு கிருஷ்ண நாமத்துக்கு சமம் என்றும் சாஸ்த்திரங்களில் கூறப்பட்டு உள்ளது. ஸ்ரீமத் பாகவதம் 1.19.6). நாமும் இந்த சாதுர்மாஸ்ய விரதத்தை அனுஷ்டித்து ஸ்ரீமன் நாராயணனின் அனுக்கிரஹம் பெறுவோம்.

எஸ்.ரகுராமன் தொடர்பு எண்: 9940349593

# கொடி மரத்தின் வரலாறு

மகாபாரத போருக்கு பிறகு தர்மர் நிறைய நன்கொடைகள் வழங்குவதன் மூலம் தன்னை உலகிலேயே ஒரு சிறந்த நீதிமானாக நினைத்து கொண்டார். கிருஷ்ணர் இந்த விஷயத்தில் தர்மருக்கு ஒரு பாடம் கற்றுக்கொடுக்க எண்ணி, அவரை அசுவமேத யாகம் செய்ய சொன்னார்.

தர்மரும் யாகத்தை தொடங்கினார். அசுவமேத குதிரை, மற்ற பாண்டவர்களுடன் வலம் வர தொடங்கியது. பாண்டவர்களின் பராக்கிரமம் அறிந்த விஷயம் என்பதால் எல்லா மன்னர்களும் தர்மரின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டனர்.

குதிரை மணிப்பூர் ராஜ்ஜியத்தை அடைகிறது. அந்த ராஜ்ஜியத்து அரசன் மயூரத்வஜன் சிறந்த கிருஷ்ண பக்தன்,. அவனுக்கு இந்த குதிரை கிருஷ்ணர் ஆதரிக்கும் பாண்டவர்களை சேர்ந்தது என்று தெரிந்து கொள்கிறான். ஆயினும் விட்டு கொடுக்க மனம் இல்லை. குதிரையை தடுத்து நிறுத்துகிறான். அவனது மகன் தாம்ப்ராதவஜன் பாண்டவகளுடன் போரிட்டு தோற்கடித்து சிறைபிடிக்கிறான்.

செய்தி கேட்டு தர்மர் கிருஷ்ணருடன் மணிப்பூர் விரைகிறார். கிருஷ்ணர், தருமரிடம் உன்னால் மயூரத்வஜனை தோற்கடிக்கமுடியாது. அதனால் நாம் மாறுவேடத்தில் செல்வோம் என்று சொல்லி அந்தணர் வேஷத்தில் செல்கின்றனர். கிருஷ்ணர் அரசரிடம் வரும் வழியில் எனது மகனை ஒரு சிங்கம் பிடித்து வைத்துள்ளது. உனது உடலில் பாதியை தந்தால் என் மகனை மீட்க முடியும் ஆனால் உனது உடலை உனது மகனும் மனைவியும் தான் வெட்டவேண்டும் என்று சொல்கிறார்.

மயூரத்வஜனும் சம்மதிக்கிறான் அவன் கண்களில் கண்ணீர் வருவதை பார்த்த தர்மன் கண்ணீருடன் தரப்படும் தானம் தங்களுக்கு தேவை இல்லை என்று சொல்ல அவனோ தனது உடலில் ஒரு பகுதி மட்டும் தானே பயன்படபோகிறது மற்றொரு பாதி யாருக்கும் பயன்பட போவதில்லையே என்பதை நினைத்து தான் கண்ணீர் விடுகிறேன் என்று சொல்கிறான்.

தர்மரின் கர்வம் அடங்கியது. கிருஷ்ணரும் அவனுக்கு விஸ்வரூப தரிசனம் தந்து, “கடவுளை வணங்கும் இடங்களில் “நீங்கள் த்வஜ ஸ்தம்பம் ஆகிவிடுவீர்கள்” என்று ஒரு வரத்தை வழங்கினார், எல்லோரும் உங்களை கடவுளுக்கு முன்பாக வணங்குவார்கள். என்று சொல்லிவிடை பெறுகிறார்.

கொடிமரம் ஜீவதாறு (உயிர் உள்ள மரம்) என்று ஒரு மரத்தில் செய்யப்படுகிறது. அது தாமிரம் மற்றும் தங்க தகடுகளால் மறைக்கப்பட்டு அதில் புராணங்களில் குறிப்பிட்டுள்ளபடி வடிவங்கள் செதுக்கப்படு கின்றன. மேலே மூன்று உலோக அடுக்குகள் அமைக்கபடுகின்றன. அதன் பெயர் மேகலா. அது மூன்று உலகங்களை அதாவது Bhur ll bhuva அண்டம் suvaha சுவர்க்கம் ஆகியவற்றை குறிக்கும் அதில் பாலி என்ற சிறிய மணி இருக்கும்.





மேலே மயூரத்வஜனை நினைவுகூறும் வகையில் ஆகாசதீபம் என்ற சிறிய விளக்கும் உள்ளது. அதில் ஏற்றப்படும் கொடிக்கு த்வஜபடம் என்றும் அழைக்கபடுகிறது. அதில் நந்தி, கருடன் ஆகியோர் படங்களோ அல்லது திரிசூலம் போன்ற ஆயுதங்களின் படங்கள் பொறிக்கப்பட்டு இருக்கும்.

கொடி ஏற்றுவதை த்வஜ ஆரோகணா என்றும் இறக்குவதை த்வஜ அவனத என்றும் சொல்லுவர்

கொடிமரத்தை சுற்றாது கோவில் பிரதிக்ஷனம் நிறைவு பெறாது.

கொடி மரம் ராஜகோபுரத்தை விட அதிக உயரமாக இருக்காது. அதே சமயத்தில் கருவறை விமானத்துக்கு நிகரான உயரத்துடன் இருக்கும். கொடி மரத்தில் ஐந்தில் ஒரு பாகம் பூமிக்குள் இருக்கும்படி அமைப்பார்கள்.

அடிப்பகுதி அகலமாகவும், சதுரமாகவும் இருக்கும் இதற்கு சமபீடத்தில், சதுர பாகம், படைப்பு தொழிலுக்கு உரியவரான பிரம்மாவையும், அதற்கு மேல் உள்ள எண்கோணப் பகுதியான விஷ்ணு பாகம் காத்தல் தொழிலுக்கு உரியவரான விஷ்ணுவையும், அதற்கு மேல் உள்ள நீண்ட ருத்ர பாகம், சம்ஹாரத் தொழிலை செய்யும் சிவபெருமானையும் குறிக்கும். இதன்மூலம் கொடி மரம், மும்மூர்த்திகளையும், அவர்கள் மேற்கொள்ளும் மூன்று தொழில்களையும் உணர்த்துகின்ற ஒரு அடையாளமாக திகழ்கிறது.

ஒரு ஆலயத்தை முழுமையடையச் செய்வது ஆலயத்தின் கொடி மரம் தான். கடவுளைக் காண முடியாவிட்டாலும் அங்குள்ள கொடி மரத்தை கைகூப்பி கும்பிடுவது அவசியம். ஏனென்றால் கொடி மரத்தின் வழியே கடவுள் ஆலயத்துக்குள் நுழைவதாக ஐதீகம்.

கொடி மரங்களுக்குக் கீழே விழுந்து வணக்கம் செலுத்துவது, இறை உருவங்களுக்கு வணக்கம் செலுத்துவதற்கு ஒப்பாகும். கொடி மரத்தருகே நம் மனமாசுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். இறையருளைப் பெற நம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டு உள்ளே செல்வதற்கு கொடி மர வணக்கம் அவசியம்.

அதுபோல கருவறையில் இருந்தும், ராஜகோபுரத்தில் இருந்தும் எவ்வளவு தூரத்தில், எவ்வளவு உயரத்தில் கொடி மரம் அமைக்க வேண்டும் என்பதற்கு விதிகள் உள்ளன. கோபுரத்திற்கும் இறைச் சந்நிதானத்திற்கும் அதிகபட்சமாக 13 மீட்டர் இடைவெளி கொண்டு கொடி மரம் அமைக்கப்படும். இது கோவிலுக்கு கோவில் மாறுபடும்.

மேலே உள்ள உலோகத் தகடுகள் இடி, மின்னல் தாக்குதலிலிருந்து ஆலயத்தைக் காக்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். உற்சவக் காலங்களில் கொடி ஏற்றுவது இந்தக் கம்பத்தில் தான். மனித உடலின் முதுகுத் தண்டைப் போல் ஆலயங்களின் முக்கிய பகுதியாக விளங்குவது கொடி மரம்.




ஆன்மிகமலர் மெயில் புக்

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# இறைவனை இகழ்ந்தால் நாவினை வெட்டும் நாயனார்

காவிரி பாயும் சோழ வளநாட்டில் வரிஞ்சையூர் என்ற இடத்தில் வேளாளர் குலத்தில் அவதரித்தவர் சத்தி நாயனார். திருவாரூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லும் வழியிலுள்ள கீழ் வேளூரிலிருந்து கச்சனம் செல்லும் பாதையில் மூன்று கி.மீ. தொலைவில் உள்ள தேவூரிலிருந்து சுமார் மூன்று கி.மீ. தொலைவில் உள்ளது வரிஞ்சையூர் என்னும் அழகிய கிராமம். தற்போது அதனை வரிஞ்சியூர் என்று அழைக்கிறார்கள்.

வரிஞ்சையூரில் அவதரித்த சத்தி நாயனார், மாலயன் முதல் தேவர்கள் காண மாட்டாத சிலம்படிகளுக்கு ஆட்செய்து பக்தியில் சிறந்து விளங்கினார். அவரது இயற்பெயர் இன்னதென்று அறியவில்லை.

விபூதி, ருத்திராட்சம், சடாமுடி கொண்ட சிவனடியார்கள் தன்னில் இலயித்து தன்னுள் எம்பெருமானாகிய சிவபெருமானை நிறுத்தி மகிழ்வர். எங்கும் சிவம் எதிலும் சிவம் என்பதால் சிவனடியார்களைத் துன்புறுத்தி இகழ்ந்து பேசுவது பெருங்குற்றம். அப்படி செய்பவர்கள் நரகத்துக்குச் செல்வார்கள் என்ற கொள்கையுடன் வாழ்ந்து வந்தார்.

இளமை முதலே சிவபெருமானின் மீது அளவற்ற பக்தியை கொண்டிருந்த சத்தி நாயனார் இளமையிலேயே சடைமுடியுடையவர்.

சிவனின் மீது பற்றுக்கொண்டு சிவனடியார்களுக்கு உதவுவதையே பெரும் பேறாக நினைத்து மகிழ்ந்து வாழ்ந்து வந்த சத்தி நாயனாருக்கு **சிவனை யாராவது பழித்து அல்லது இகழ்ந்து பேசினால் அவர்களது நாவை தம்மிடம் இருக்கும் குறட்டினால் பிடித்து அரிவார்**. அவர்கள் நாவினை அரியும் வலுவைக் கொண்டிருப்பதாலேயே அவர் சத்தியார் என்றழைக்கபெற்றார். சிவனின் மீது கொண்டிருந்த அன்பினாலேயே இத்தகைய அன்பை செய்து வந்து சிவனின் அன்பை பெற்றார்.

ஆண்மையுடடைய திருத்தொண்டை நிலை பெற்ற பெரிய உலகில் பற்பலகாலம் இடைவிடாது செய்துவந்தார், சிவனடியார்களை யாரும் இகழா



வண்ணம் முழுக்க முழுக்க சிவனுக்காகவே வாழ்ந்துவந்தார். அளவற்ற தொண்டாற்றி சிவனது பாதத்தில் சரணடைந்தார். ஐப்பசி மாதம் பூரம் நட்சத்திரத்தன்று சிவாலயங்களில் இவருக்கு குருபூஜை கொண்டாடப்படுகிறது.

இவரது சிவபக்தியைச் சிறப்பிக்கும் வகையில் இத் தொண்டினைச் சேக்கிழார் பெருமான், "அன்புடன் ஓங்கு சீர்த் திருத் தொண்டு" என்றும், "ஆண்மைத் திருப்பணி" என்றும் போற்றுவார். மேலும் இச்செயற்கரிய செயலைச் செய்த நாயனாரை, "வீரத் திருத் தொண்டர்" என்றும் சிறப்பிக்கிறார்.

இவ்வாறு சிவனடியார்களை இகழ்ந்தோரது நாவினை அறுத்துத் தூய்மை செய்த நாயனார், பொன்னம்பலத்தில் அனவரதமும் நடமாடும் பெருமானது கழலடியைச் சேர்ந்தார் என்கிறது பெரிய புராணம்.

வரிஞ்சையூரில் உள்ள சிவாலயத்தில் சத்தி நாயனாருக்காக தனிச் சன்னதி அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் கூப்பிய கரங்களுடன், சுவாமி சன்னதியை நோக்கியவாறு நாயனார் காட்சி அளிக்கிறார். அம்பிகை சன்னதி தெற்கு நோக்கியது. சுவாமி சன்னதியின் அர்த்த

ஆன்மிக மாதமிருமுறை இதழ்



வரிஞ்சியூர்சிவாலயம்



நாயனாருக்கு தனி சன்னதி



சத்திநாயனார் புராணம் கல்வெட்டாக

மண்டபத்தில் பெரிய புராணத்தில் வரும் சத்தி நாயனார் புராணத்தைக் கல்வெட்டில் பொறித்து வைத்திருக்கிறார்கள்.

**இன்றைக்கு இந்த நாயனார் இருந்திருந்தால் தமிழகத்தில் பலபேர் நாக்கு இல்லாமல் அலைந்திருப்பார்கள்.**

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# பழைய வாழ்க்கை முறைக்கு திரும்புங்கள்

பழைய வாழ்க்கைமுறை என்பதை பத்தாம் பசலித்தனம் என்று நம்மில் பலர் ஒதுக்கி விடுகிறோம். காலம் எவ்வளவோ முன்னேறி விட்டது எந்த நேரத்தில் பழையகால நடைமுறைகளை கடைபிடிப்பது முடிகிற காரியமா? என்று அதற்கு விளக்கம் வேறு கொடுக்கப்பட்டுகிறது இது சரியான வழிமுறை தானா? என்று இந்த நேரத்தில் சிந்தித்து பார்க்க கடமை ஏற்பட்டுள்ளது இதை பற்றி இப்போது சிந்தனை செய்யவில்லை என்றால் வேறு எப்போது செய்தாலும் அது பொருத்தமாக இருக்காது.

நமது பெரியவர்கள் யாரையும் தொட்டு பேச கூடாது நெருங்கி பேச கூடாது என்று கூறுவார்கள் இப்படி கூறப்பட்டது தீண்டாமை சிந்தனையின் ஒரு பகுதி என்பதை நான் மறுக்கவில்லை ஆனால் இதில் தீண்டாமை பற்றி மட்டும் இல்லை அடிப்படையான சுகாதாரமும் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அந்நிய மனிதன் யார் வந்தாலும் அவர்களை உடனடியாக வீட்டிற்குள் அனுமதிக்க மாட்டார்கள் கூடியமானவரை வாசலிலேயே பேசிவிட்டு அனுப்பிவிடுவார்கள் இது உபசரிப்பு முறைக்கு எதிரானது அல்ல வந்திருப்பவர் எந்த நிலையில் இருக்கிறார் அவரிடம் அசுத்தமான தொற்றக்கூடிய நுண்ணுயிர்கள் எதாவது இருக்க கூடும் அது நமது வீட்டிலுள்ள குழந்தைகளை பெரியவர்களை பாதிக்கலாம் அதன் அடிப்படையிலேயே வாசலில் விபரம் கேட்கும் நடைமுறை இருந்து வந்தது




முன்பெல்லாம் வீட்டு வாசலில் சிறிய தண்ணீர் தொட்டி வைத்து அதில் சொம்பையும் வைத்திருப்பார்கள் வெளியில் சென்று வருபவர்கள் கால் கைகளை கழுவி விட்டு தான் உள்ளே வரவேண்டும் என்ற விதி கண்டிப்பாக பின்பற்றப்பட்டது அதே போன்று சவரம் செய்து விட்டோ முடி திருத்தி விட்டோ நேரடியாக யாரும் வீட்டிற்குள் நுழைய கூடாது. நுழைந்தால் கிரக லட்சுமி வெளியேறி விடுவாள் என்று சொல்லபட்டாலும் கூட அதற்கு அடிப்படை காரணம் சுகதாரமே ஆகும்.

இறப்பு வீட்டிற்கு சென்று வருபவர்கள் குளிக்காமல் யாரும் வரமாட்டார்கள் அதே போல அப்போது அவர்கள் அணிந்திருக்கும் ஆடையை சலவை செய்யாமல் யாரும் தொடக்கூட மாட்டார்கள் ஆனால் இன்று நிலைமை முற்றிலும் தலைகீழாக மாறிவிட்டது நாகரீகம் அவசரம் என்ற பெயர்களில் நமது மரபு முறைகளை சிறிது சிறிதாக தொலைத்து கொண்டு வருகிறோம்.

கிராமத்தில் வீட்டில் யாருக்காவது அம்மை நோய் வந்தால் யாரும் அந்த வீட்டிற்கு இரண்டு வாரம் செல்ல மாட்டார்கள் வீட்டில் இருப்பவர்கள் கூட எல்லோரும் நோயாளியை அணுகாமல் யாராவது ஒருவர் மட்டும் நோயாளிக்கான சேவைகளை செய்வார்கள் வெளியூரிலிருந்து வருபவர்கள் இந்த வீட்டில் அம்மை நோயாளி இருக்கிறார் என்று அறிந்து ஒதுங்கி கொள்ள வீட்டு வாசலில் வேப்பிலையை சொருகி வைப்பார்கள் நோயாளி படுக்கையிலும் மஞ்சள் நீர் தெளித்து வேப்பிலையை விரித்து வைத்திருப்பார்கள் இந்த சுகாதார முறையெல்லாம் நமது மக்கள் கல்லூரிக்கு சென்று படித்து வந்தது அல்ல காலகாலமாக நடைமுறையில் இருந்து வந்ததை அப்படியே கேள்வி கேட்காமல் நடைமுறைபடுத்தி வாழ்ந்தார்கள் கொள்ளை நோய்களான காலரா,







யோகி ஸ்ரீ ராமானந்த குரு

ப்ளேக் போன்றவைகள் தாக்கும் காலத்தில் கூட மரணத்தின் எண்ணிக்கையை குறைப்பதற்கு மற்ற நாடுகளை விட அதிகமான பழக்க வழக்கங்கள் நம் மக்களிடம் இயல்பாக இருந்து வந்தது. குடிக்கும் நீரில் தான் நோய் தொற்றுகள் இருக்கிறது என்பதை அறிவியல் பூர்வமாக அறிவதற்கு முன்பாகவே தண்ணீரின் வேப்பிலை, துளசி, அருகம்புல் போன்ற மூலிகைகளை போட்டு இயற்கையான சூரிய வெளிச்சத்தில் சூடாகுமாறு வைத்து பயன்படுத்தினார்கள். தானியங்கள் பழவகைகள் மற்றும் பல உணவு வகைகள் இவற்றில் மிக சிறந்த கிருமி கொல்லியான தர்ப்பை புல்லை போட்டு வைத்தார்கள் இதனால் அவர்களது ஆரோக்கியமும் நன்றாக இருந்தது ஆயுளும் நீண்டு இருந்தது.



அந்நியர்களிடம் உணவு வாங்கி உண்ண கூடாது தேவையில்லாமல் உணவு விடுதிகளை நாடக்கூடாது என்று அவர்கள் கூறியதன் பின்னணியில் மிகப்பெரிய காரணங்கள் மறைந்திருந்தன வழக்கமாக நாம் நமது வீடுகளில் சமைப்பதற்கும் மற்றவர் வீடுகளில் சமைப்பதற்கும் பெரிய வேறுபாடு உண்டு உதாரணமாக சிலர் சாதத்தில் உப்பு போட்டு வடிப்பார்கள் சிலர் அப்படி செய்ய மாட்டார்கள். இதை மாற்றி உண்ணும் போது வயிற்று கோளாறுகள் இயல்பாகவே ஏற்பட்டு விடும். சமைக்கப்படும் உணவில் சமைப்பவனின் இயல்பும்

மறைந்திருக்கும் இது நமது மனநிலையில் தடுமாற செய்யும். ஒருவரை ஒருவர் கட்டி அணைப்பதும் முத்தமிடுவதும் உரசி கொண்டு நடப்பதும் நமது பண்பாட்டிற்கு முற்றிலும் விரோதமான காரியங்களாகும் நாம் பெற்ற பிள்ளைகளாக இருந்தாலும் ஒரு வயதிற்கு மேல் அவர்களை தொட்டு பேச கூடாது என்பார்கள் இவைகள் எல்லாம் ஆயிரம் அர்த்தங்களோடு வகுக்கப்பட்ட நெறிமுறைகளாகும்

இவற்றை இன்று காற்றில் பறக்கவிட்டுவிட்டு தேவையில்லாத சீர்திருத்தங்களை பேசி அவதிப்பட்டு கொண்டிருக்கிறோம். ஆனால் மீண்டும் அத்தகைய பழைய நடைமுறைகளை புனரமைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்

முதலில் தினசரி வீட்டு வாசலில் பெருக்கி சாணமிட்டு கோலம் இடுங்கள் அடுக்குமாடி வீடுகளில் இருக்கிறோம் இங்கே எப்படி சாணம் தெளிப்பது என்று கேட்கிறீகளா? உங்கள் குடியிருப்புக்குள் நுழைவதற்கு முக்கிய கதவு பாதை இருக்கும் அல்லவா அங்கே சாணம் தெளியுங்கள் சாணத்திற்கு நகரத்திற்குள் எங்கே போவது என்று கேட்காமல் மாற்று வழியாக மஞ்சள் நீரை தெளியுங்கள் தினசரி காலை மாலை இருவேளையும் வாசல் கதவு ஜன்னல் கதவு போன்றவைகளை காற்று வரும்படி திறந்து வையுங்கள் ஏசி வெளியே கசிந்து விடுமென்று பூட்டி வைக்காதீர்கள் பிறகு உங்கள் ஆரோக்கிய பெட்டியையும் பூட்ட வேண்டிய நிலைமை வரும். வாரத்தில் இருமுறையாவது வீடு முழுவதும் சாம்பிராணி புகை போடுங்கள் தினசரி வீட்டில் விளக்கெண்ணை வைத்தோ நெய் விட்டோ தீபம் ஏற்றுங்கள்

குறிப்பாக பெண்களுக்கு சொல்ல வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. அழகுக்கலை நாகரீகம் என்ற பெயரில் அசிங்கமாக தலையை விரித்து போட்டுகொண்டு இருக்காதீர்கள் சாவு வீட்டில் தான் நம் ஊரில் பெண்கள் தலைவிரி கோலமாக இருப்பார்கள் நீங்கள் கூந்தலை விரித்து போடுவதனால் உதிர்ந்த கேசங்கள் உணவுகளில் விழுவதற்கும் குழந்தைகளின் வயிற்றிகுள் செல்வதவற்கும் வாய்ப்பு உண்டு

இவைகளெல்லாம் சின்ன சின்ன விஷயங்கள் தான் இவைகளை கடைபிடித்தாலே சுகாதாரம் என்பது உங்கள் வீட்டு குழந்தையாகிவிடும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434



# குங்குமார்ச்சனையின் சில வழக்கங்கள்

தேவியின் நாமஜபத்தை செய்து கொண்டே குங்குமத்தை ஒவ்வொரு சிட்டிகையாக எடுத்துக் கொண்டு தேவியின் பாதங்களில் துவங்கி தலை வரை அர்ச்சிக்க வேண்டும். அதோடு தேவியின் நாமஜபத்தை செய்து கொண்டே குங்குமத்தால் ஸ்நானம் செய்விக்க வேண்டும்.

சில இடங்களில் தேவிக்கு குங்குமார்ச்சனை செய்யும்போது சரணங்களில் மட்டுமே அர்ச்சனை செய்யப்படுகிறது.

சாஸ்திரம் : மூல செயல்படும் சக்தி தத்துவம் சிவப்பு ஒளி மூலம் நிர்மாணமாவதால் சக்தி தத்துவத்தின் சின்னமாக விளங்கும் தேவியின் பூஜை, குங்குமத்தால் செய்யப்படுகிறது. குங்குமத்திலிருந்து வெளிப்படும் சுகந்த அதிர்வலைகளால் ப்ரம்மாண்டத்திலிருந்து சக்தி தத்துவ அதிர்வலைகள் குறைந்த காலத்திற்குள்ளாக ஆகர்ஷிக்கப்படுகின்றன. மூர்த்தியில் ஸகுண தத்துவத்தை விழிப்படையச் செய்யவும் தேவி தத்துவத்தை பிரசன்னமாக்கவும் குங்குமம் உதவுவதால் தேவி பூஜையில் குங்குமம் முதலிடம் வகிக்கிறது. மூல சக்தி தத்துவத்தின் பீஜமான சுகந்தம் குங்குமத்திலிருந்தும் வெளிப்படுவதால் தேவி தத்துவத்தை விழிப்படைய செய்ய குங்குமம் பெரும் பங்கு வகிக்கிறது.

## குங்குமார்ச்சனை செய்ததால் ஏற்பட்ட அனுபூதி

குங்குமார்ச்சனை செய்யப்பட்ட குங்குமத்தை நெற்றியில் இட்டவுடன் பிரார்த்தனையும் நாமஜபமும் மிக நன்றாக நடந்தது; உற்சாகமாக இருந்தது : ‘27.1.2004 அன்று நாங்கள் குங்குமார்ச்சனை செய்வதற்காக கோவிலுக்கு சென்றோம். பூஜைக்கு நாங்கள் அளித்த குங்குமம், இரு மூர்த்திகளின் அர்ச்சனைக்கும் உபயோகிக்கப்பட்டது. பின்பு எங்களின் கோரிக்கை தேவியின் முன் வைக்கப்பட்டு பின்பு அந்த குங்குமம் பிரஸாதமாக எங்களுக்கு வழங்கப்பட்டது. குங்குமத்தை வாங்கிக் கொள்ளும்போது நான் தேவியிடம் இவ்வாறு பிரார்த்தனை செய்தேன், ‘ஹே ஸாதேரிதேவி, இந்த குங்குமத்தின் மூலம் எங்களுக்கு சக்தி கிடைக்கட்டும், எங்களின் பிரார்த்தனையும் நாமஜபமும் நன்றாக நடக்கட்டும். அன்றிலிருந்து எப்பொழுதெல்லாம் அந்த குங்குமத்தை நான் நெற்றியில் இட்டுக் கொள்கிறேனோ அப்பொழுதெல்லாம் என் நாமஜபம் ஆரம்பமாகிறது; அதோடு ஒரு தனி விதமான உற்சாகமும் ஏற்படுகிறது. திருமதி ரக்ஷந்தா ராஜேஷ் காவ்கர், கோவா.



தேவி பூஜை செய்வதற்கு முன்னால் தேவி தத்துவ சம்பந்தமான கோலத்தைப் போட வேண்டும்

முக்கியமாக செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் தேவி பூஜைக்கு முன்னால் மற்றும் நவராத்திரி சமயத்தில் வீட்டு வாயிலிலும் பூஜை அறையிலும் தேவி தத்துவத்தை ஆகர்ஷிக்கும் மற்றும் வெளிப்படுத்தும் ஸாத்வீக கோலங்களைப் போட வேண்டும்.

ஸ்ரீ துர்காதேவி தத்துவத்தை ஆகர்ஷித்து வெளியிடும் சில கோலங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. எல்லா தேவிகளும் ஆதிசக்தி ஸ்ரீ துர்காதேவியின் பலவித ரூபங்கள், ஆதலால் அந்தந்த தேவியின் உபாஸனை செய்யும்போது ஸ்ரீ துர்காதேவி தத்துவ சம்பந்தமுடைய கோலத்தைப் போடவும். இந்த கோலத்தைப் போடுவதால் சூழல் தேவி தத்துவத்தால் நிறைந்து அதன் மூலம் பலன் கிடைக்கிறது. இந்த கோலத்தை, மஞ்சள், நீலம், ரோஸ் போன்ற ஸாத்வீக நிறங்களால் நிரப்புங்கள்.

## சைதன்ய அனுபூதியை வழங்கும் கோலம்

நடுபுள்ளியிலிருந்து எட்டு திசைகளில் 5 புள்ளிகள் வைக்க வேண்டும். புள்ளி ஒன்றிலிருந்து துவங்கி 3, 5, 2, 4 வரை இணைத்து திரும்பவும் ஒன்றில் வந்து முடிக்க வேண்டும்.



## பக்தியுணர்வை அதிகரிக்க உதவும் கோலம்



14 புள்ளி; 14 வரிசை

## பூஜையறை, மணைகளில் போட உதவும் கோலங்கள்

17 புள்ளி : 3 வரிசை; 1916 புள்ளிகள்



## தேவியின் தத்துவத்தை ஆகர்ஷித்து வெளியிடும் வடிவமைப்பு



சில வடிவமைப்புகள் தேவி தத்துவத்தை ஆகர்ஷித்து வெளியிட உதவுகின்றன. அத்தகைய ஒரு வடிவமைப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வடிவமைப்பை கோலத்தில், தேவிக்கு முன்பாக செய்யும் அலங்காரத்தில், தோரணத்தில் உபயோகப்படுத்துவதால் தேவி தத்துவத்தின் அதிகபட்ச பலன் கிடைக்கிறது.

ஆன்மிகமலர் மெயில் புக்
ஆன்மிகமலர் மெயில் புக்

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும் ஆன்மிக மாதமிருமுறை இதழ்

# உயிர்ப்பான வாழ்க்கை வலிமையானது

தானாக இயங்கிக் கொண்டிருக்கின்ற உடலைப் பற்றி மனிதன் சிந்திக்க வேண்டாம். இயங்காமல் நின்றுவிட்ட புத்தியைப் பற்றித்தான் அவன் சிந்திக்க வேண்டும்!

❖❖❖

சூளையிட்ட செங்கற்கள் தான் இடம் விட்டு இடம் பெயர் சித்தாட்களை நம்ப வேண்டும். கற்கள் கட்டிடங்களாக மாற கொத்தனாரைச் சரணடைய வேண்டும். ஒரு தனி மனிதனும் சரி, அல்லது ஒரு தனி சமுதாயமும் சரி..வேறு எவரையும் நம்பிக் கிடக்கவேண்டாம்.. என்பதே என் கருத்து.

❖❖❖

தானாகவும் உருவாகி, ஒரு சமுதாயத்தையும் தானாக உருவாகும்படி செய்பவன் ஓர் தனி மனிதனே.



❖❖❖

புத்தி உள்ளவன் எளிதில் புரிந்து கொள்ளுவது எது? தனது புத்தியைக் கொண்டு மற்றவன் பிழைத்து விடுகிறான் என்பதைக் கண்டு உஷார் ஆகிவிடுவதே அது (Exploit).

❖❖❖

தெய்வீகத் துறையில் நம்பிக்கை ஊட்டும் வண்ணம் சொல்லுவது எது? எளிதில் பக்தி செய்து எளிதில் கடவுளைப் பார்த்துவிடலாம் என்பதே அது.

❖❖❖

ஐம்பூதங்களுக்கு (நீர், நெருப்பு, மண், காற்று, ஆகாயம்) எப்பொழுதும் மதிப்பு உண்டு. இவைதனைப் போன்ற மனிதன், தனது மதிப்பை உணராத போதே. மற்றவைகளுக்கு மதிப்பு மிக அதிகம் என எண்ணுகிறான். இப்படி மிக மெதுவாக சிந்திக்காமல் மிக வேகமாக சிந்திக்க வேண்டும் மனிதன்.

❖❖❖

துன்பம் என்பது "சுளுக்கு" போன்றது. கடவுளை நம்பினால் துன்பமே இல்லை. அவன் சுளுக்கை எடுத்துவிடுவான்.

❖❖❖

"தை" பிறந்தால் வழி பிறக்கும் என்பது உங்கள் வாசகம். மனம் திறந்தால் அல்லது அது இருந்தால் சிந்தனை பிறக்கும் என்பதே என் வாசகம்.

❖❖❖

மனம் வாசல், சிந்தனை காற்று.. என்பதால் உனக்கு எதிர்காலம் எப்பொழுதும் உண்டு என்பதை உணர்.

❖❖❖

பக்தி செய்தால், நாட்டிலே இருக்கின்ற எல்லாக் கடவுள்களுக்கும் என்ன உண்டு? ஏராளமான சக்தி அவைகளுக்கு உண்டு. உங்கள் துன்பங்களைத் தீர்க்கும் அருளும் அவைகளுக்கு உண்டு.

❖❖❖

உனது புத்தியை வைத்துக் கொண்டு, நீ என்ன செய்யப் போகிறாய் என்பது ஆண்டவனுக்கு நன்றாகத் தெரியும். இதுவே உனது எதிர்காலம் எனப்படும்.

❖❖❖

மார்க்கெட்டிற்குள் கத்தி தீட்டும் ஒலியும், 'லொட்...லொட்' என்று அடிக்கும் ஒலியும்...கசாப்புக் கடை என்பதை உணர்த்தாதா என்ன?! அதனால் விரைவில் பக்தியை மட்டும் செய்யுங்கள். இறைவன் உடனே வந்துவிடுவான்.

❖❖❖

அறுவடை, தை மாதத்தில் மட்டும் அல்ல. மூன்று போகம் அறுவடை உண்டு. அதுபோல் என்னைப் பார். பிறகு உனது புத்தியைப் பார். அடுத்த நிமிடமே வெற்றி அறுவடை.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
செந்தில்நாதன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# ஸ்ரீ சமர்த்த ராமதாசர்

## வரலாறு

ஸ்ரீ சமர்த்த ராமதாசர் நிறுவிய ஹனுமான் கோயில்கள் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளான ராஜஸ்தானில் ஜெய்ப்பூர், உத்தர பிரதேசத்தில் வாரணாசி, தமிழ்நாட்டின் தஞ்சை மற்றும் மத்திய பிரதேசத்தில் உஜ்ஜைன் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. (ஒருசில கோவில்கள் தனியாக பெட்டிச் செய்தியாக தரப்பட்டுள்ளது) சமர்த்த ராமதாஸர் காசி, அயோத்தி, பிரயாகை, பிருந்தாவனம் என்று பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் செல்கையில் காசியில் ஹனுமான்காட் என்னும் இடத்தில் ஹனுமானுக்கு ஒரு கோவில் அமைத்திருக்கிறார். இன்றும் அந்த கோவில் மிகப் பிரசித்தியுடன் இருப்பதாக சொல்லப்படுகிறது.

### சமர்த் பிரிவு:

இந்தியாவின் விடுதலைக்காகவும் உண்மை யான ஆன்மீகத்தைப் புதுப்பிப்பதற்காகவும் ஸ்ரீ சமர்த் மத பிரிவைத் தொடங்கினார். முஸ்லீம் ஆட்சியாளர்களை கவிழ்க்க முயன்ற சிவாஜி மன்னரை அவர் ஆதரித்தார்.

அவர் பன்முகத்தன்மை வாய்ந்த, ஆன்மீக, உயர்ந்த தார்மீக தரங்களை நிர்ணயித்த மற்றும் சமுதாயத்திற்காக உழைக்கக்கூடிய அரசியல் ரீதியாக தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார்.

துன்பங்களுக்கு மத்தியில் அமைதியாக அமர்ந்திருக்கும் புனிதர்கள் மனிதகுலத்திற்கு ஒரு அவமானம், புனிதர்களாக இருக்க தகுதியற்ற வர்கள் என்று சமர்த் கருதினார். இதன் மூலம் அவர் ஆன்மீகம், சமூகப் பணி மற்றும் அரசியல் ஆகியவற்றைக் கலந்தார். இறுதியில், அவரது இயக்கம் வெற்றிகரமாக இருந்தது.

### பொறுமையின் பெருமை

இவர் எளிய வாழ்க்கையை மேற்கொண்டர். பொறுமையின் சிகரமாகத் திகழ்ந்தர். இறை வாழ்வினை மேற்கொண்டர். ஒருநாள் பிட்சைக்காகச் சென்றபோது, ஒரு விட்டிலிருந்த பெண்மணி சாணம் கொண்டு வீடு மொழுகிக் கொண்டிருந்தாள். ராமதாசர் பிட்சை கேட்டதும் , ஏதோ கோபத்தில் கையிலிருந்த பழைய சாணித் துணியை அவர் மேல் எறிந்தாள். பெண்மணியின் செயலைப் பொருட்படுத்தாமல் அதை எடுத்துச்சென்று, அதை நன்கு சுத்தப்படுத்தி அதிலிருந்த கந்தல்களைக் கொண்டு விளக்குத்திரிகள் தயார் செய்தார். பின் அவற்றை இட்டு விளக்கேற்றி, அந்தப் பெண்மணியின் நலனுக்காக இறைவனிடம் மனம் உருகப் பிரார்த்தித்தவர்.



எஸ்.ரகுராமன்

### சீடர்கள்

சமர்த் ராம்தாஸுக்கு பல சீடர்கள் இருந்தனர். கல்யாண் சுவாமி, உத்தவ் சுவாமி, வெண்ணா சுவாமி, அக்கா சுவாமி, பீம் சுவாமி ஷாஹாபுர்கர், திவாகர் சுவாமி, திவாகர் சுவாமி, தின்கர் சுவாமி, அனந்த் புவா ராம்தாசி மேதவடேகர், அனந்த் காவி, அனந்த் மஹுஸீ னி, ஆச்சார்யா கோபால்தாஸ், தின்கர் சுவாமி,தத்தராய் சுவாமி,வாசுதேவ் சுவாமி, பகவான் ஸ்ரீதர் சுவாமி,சேதுரம் பாவா.

### சிவாஜி சந்திப்பு

சத்ரபதி சிவாஜி, வீர சிவாஜி என்றெல்லாம் பேரும் புகழும் பெற்ற ‘சிவாஜி’ மகாராஷ்டிரத்தை ஆண்டு கொண்டிருந்த காலம் அது. நதியில் இறங்கி சிவாஜி தன் கை, கால்களைத் தூய்மை செய்து கொண்டிருந்த போதுஞ் ஆற்று நீரில் பல ஓலைச் சுவடிகள் மிதந்து வந்ததைப் பார்த்தார்.

ஓர் ஓலைச்சுவடியை எடுத்துப் பார்த்த போது, அதில் மஹாராஷ்டிர மொழியில் எழுதப்பட்டிருந்த அற்புதமான கவிதைகள் இருந்தன. மனம் வியந்த சிவாஜி, ஓலைச் சுவடிகளை எல்லாம் எடுத்துக் கொண்டு ஆற்று நீர் வந்த திசையை நோக்கிக் குதிரையைச் செலுத்தினார். அங்கே ஓரிடத்தில்.. சிவாஜி கண்ட காட்சி, அவரை மேலும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. காரணம்? அங்கே மர நிழலில் ஒரு பாறையின் மீது இருந்தபடி ஒப்பற்ற ஒரு தவ சீலர் இனிய குரலில் இராம நாமத்தைப் பாடிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி காட்டில் இருந்த கொடிய விலங்குகள் எல்லாம் அமர்ந்திருந்தன. அந்தக் கொடிய விலங்குகளிடம் பயப்பட வேண்டிய பசுக்களும், மான்களும் அவற்றின் அருகிலேயே எந்த விதமான பயமும் இல்லாமல் எல்லாம் ஒரே கூட்டமாக அமர்ந்து கொண்டும் ஒன்றிரண்டு சுற்றியபடியும் இருந்தன. மறுநாளும்.. சிவாஜி அந்த ஞானியைத் தரிசிக்கப் போன போது ஞானி வழக்கப்படி இராம நாமத்தைப் பாடிக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றிக் கூடியிருந்த காட்டு விலங்குகள் எல்லாம் கண்களிலிருந்து நீர் வழிய அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தன. மிருகங்களைப் பார்த்த சிவாஜிக்கு அவரை நெருங்க மிகவும் தயக்கமாகத்தான் இருந்தது. சிறு வயது முதலே வேட்டையாடுவதில் ஆர்வம் கொண்டவர், சிவாஜி. அவரின் வருகையை அறிந்தால், வன விலங்குகள் ஓடி ஒளிந்து கொள்ளும். ஆனால் அன்றைய தினம், விலங்குகள், ஓடி ஒளியாமல், குருவின் தியானத்திற்கும் பங்கம் விளைவிக்காமல் இருந்தது அரசனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவரின் தியானம் கலையும் வரை காத்திருந்து, அவர் அழைத்த பிறகு அருகில் சென்று நமஸ்கரித்துக் கொண்டார். தான் கொண்டு வந்திருந்த பண்டங்களை குருவுக்கு அர்ப்பணித்தார்.




ஆன்மிகமலர் மெயில் புக்

## மாருதி பிரதிஷ்டை செய்யப்பட்ட இடங்கள்

| கிராமத்தின் பெயர் | இடம் | ஆண்டு |
|---|---|---|
| ஷாஹாபூர் | காரட் | 1644 |
| மசூர் | காரட் | 1645 |
| சாபல் வீர் மாருதி கோயில் | சதாரா | 1648 |
| சாபல் தாஸ் மாருதி கோயில் | சதாரா | 1648 |
| ஷிங்கன்வாடி | சதாரா | 1649 |
| அம்ப்ராஜ் | மசூர் | 1649 |
| மஜ்கான் | சதாரா | 1649 |
| பஹே | சங்லி | 1651 |
| மனபடேல் | கோலாப்பூர் | 1651 |
| பர்கான் | பன்ஹாலா | 1651 |
| ஷிராலா | | 1654 |

'குருவே, தங்களின் முன்னால், பகைமைப் பாராட்டும் விலங்குகள் கூட சண்டையிட்டுக் கொள்ளாமல் ஒற்றுமையுடன் இருக்கின்றதுவே. அதற்கு என்ன காரணம்?' என்று கேட்டார்.

'அரசே, நீ இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் உனக்கு ஒரு கதையைச் சொல்கிறேன் கேள்' என்று சொல்லி, அன்பின் வலிமையை விளக்கும் கதை ஒன்றை கூறலானார். சமர்த்த ராமதாசர், சிவ குடும்பத்தில் நிலவும் அன்பின் வல்லமையை விளக்கும் சுவாரஸ்யமான அம்சம் ஒன்றை விளக்கினார். கதையைக்கூறத் தொடங்கினார். கையிலம்பதியில் ஒரு நாள், பூத கணங்கள், சிவபெருமானின் முன்னிலையில் தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தன. அவைகளின் தயக்கத்தைக் கண்ட முக்கண்ணனார், யாது வேண்டும் எனக் கேட்டார். 'எங்களுக்கு வெகு நாட்களாகவே ஒரு சந்தேகம் உண்டு. அதைப் பற்றி தான் உங்களிடம் கேட்கலாமா என்று யோசனை செய்கிறோம்' என்றன.

'சந்தேகத்தை மனதிலேயே வைத்துக்கொள்ளக் கூடாது. என்ன கேட்க வேண்டுமோ அதைக் கேளுங்கள். எனக்கு என்ன தெரியுமோ அதை நானும் சொல்கிறேன்' என்றார்.

'தங்களின் வாகனமோ நந்தி தேவர். ஆனால் தாங்கள், தங்களின் தேகத்தில் சரி பாதி இடமளித்து இருக்கும் உமையவளின் வாகனமோ சிம்ஹம் ஆகும். இவை இரண்டும் எந்நாளும் சண்டை போட்டுக் கொள்வதே இல்லை. தாங்கள் உடல் முழுவதிலும் அரவங்களை ஆபரணமாக அணிந்து இருப்பவர். தங்களின் புத்திரரான முருகக் கடவுளோ அரவத்திடம் பகைமை பாராட்டும் மயிலினை வாகனமாகக் கொண்டுள்ளார். அவைகளும் சிநேக பாவத்துடன் தான் இருக்கின்றன. அது மட்டுமல்ல, அக்னிப் பிழம்பான தங்களின் மூன்றாவது நேத்திரத்தின் மேல் புறத்தில் கங்கா தேவியானவர் குடி கொண்டிருக்கிறார். அந்தத் தேவி ஒரு பொழுதும் அக்னியை தன்னுடைய பிரவாகத்தினால் அழித்ததில்லை. ஒன்றுக்கொன்று எதிர்மாறான குணங்களைக் கொண்டிருந்தாலும், எப்பொழுதும் கைலாயத்தில், சண்டையே இருப்பதில்லை. அன்பான, சுமுகமான சூழலே காணப்படுகிறது. அதன் ரகசியத்தை எங்களுக்கும் கூறுவீர்களா?' என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தன.

மௌனமாகச் சிரித்தார், சர்வேஸ்வரன்.

'இதில் ரகசியம் அதுவுமே இல்லை. கூறுகிறேன் கேளுங்கள். அன்பை மிஞ்சிய அமுது வேறெதுவும் இல்லை. எல்லா உயிர்களிடத்தும் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். யாரிடமும் பகைமைப் பாராட்டக் கூடாது. எந்த வித பகைமையையும் அன்பால் சுலபமாக மாற்றி விடலாம்.இதைப் புரிந்து கொண்டு எல்லோரும் செயல்பட வேண்டும் என்பதற்காகவே இந்த மாதிரி ஒரு கூட்டமைப்பு உண்டாக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? சந்தேகம் இல்லையே?' என்று விளக்கம் கொடுத்தார். சிவகணங்கள் திருப்தி அடைந்து, வந்த வழியே சென்றன. அரசே புரிந்ததா? அன்பால் எதையும் ஆட்கொள்ள முடியும். உயிர்களிடத்தில் அன்பு காட்டு. எல்லா உயிர்களும் ஆண்டவனின் குழந்தைகள். அன்பே சிவம்.

சமர்த்த ராமதாசர் தன்னுடைய சீடனான சிவாஜிக்கு, அன்பின் வலிமையை விளக்கினார். 'குருவே, எனக்கு நல்லதொரு உண்மையைப் புரிய வைத்தீர்கள். இனிமேல் எந்தவிதமான விலங்கினையும் நான் வேட்டையாட மாட்டேன். இது உறுதி' என்று கூறி குருவினைப் பணிந்தார், சிவாஜி. சத்ரபதி சிவாஜிக்குள் ஒரு தெளிவு பிறந்தது. மன மாற்றத்துடன் சதாராவுக்குத் திரும்பினார். அன்று முதல் வேட்டையாடும் பழக்கத்தையே அடியோடு விட்டு விட்டார்.

– எஸ்.ரகுராமன்

தொடர்பு எண்: 9940349593





## முட்டாள் மூடர்கள்

கடவுளை வைத்து சம்பாதிக்கும் கூட்டம் இன்று அதிகம் பெருகியுள்ளது. இறைவை வளர்ப்பதைவிட அவர்களின் வயிற்றை நிரப்புவதற்காக என்னவேண்டுமானாலும் செய்ய ஒருசிலர் துணிந்துவிடுகின்றனர்.

அந்தவகையில் தற்போது கந்த சஷ்டி கவசத்தை ஆபாசமாக திரித்து கூறி அதன் மூலம் இந்துமத வெறுப்பாளர்களிடம் கையூட்டு பெற்று தங்கள் வயிற்றை நிரப்பும் அளவிற்கு தரம் தாழ்ந்துவிட்டனர். இவர்கள் எந்த வேலை வெட்டியும் செய்யமாட்டார்கள், வருமானம் மட்டும் வேண்டும் என்று நினைப்பவர்கள். **இப்படி வயிற்றை வளர்ப்பதற்கு பிச்சை எடுத்து பிழைக்கலாம்** என்பதை மறந்துவிடுகின்றனர்.

மற்ற மதத்தை இழிவுபடுத்தினால் உடலில் உயிர் இருக்காது, ஆனால் இந்து மதத்தை இழிவுபடுத்தினால், **"பசுவைப் போன்று சாதுவான இந்துக்கள் அமைதியாகவே இருந்துவிடுவார்கள்"** என்ற காரணத்தால்தான் பல்வேறு அரசியல்கட்சிகள், அமைப்புகள் போன்றவை இந்துமதத்தை இழிவு படுத்தி அதன்மூலம் சிறுபான்மையினரை தங்கள் வாக்குவங்கியாகவே பயன்படுத்துகின்றனர்.

நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை செய்தால் மக்கள் எப்போதும் இவர்களை ஆதரிப்பார்கள் என்பது உண்மையாக இருந்தாலும், ஆட்சியில் கொள்ளை அடிப்பதை யும், திருடுவதையும் மட்டுமே செய்வதற்காகவே கட்சி அமைப்புகள் நடத்தி, தேர்தல் வரும் சமயங்களில் எப்படியாவது ஆட்சியை பிடித்தே தீரவேண்டும் என்ற நோக்கில் சிறுபாண்மையினர் வாக்கை எப்படியாவது பெற வேண்டும் என்பதால் பெரும்பான் மையான இந்துக்களின் தெய்வங்களை இந்த மூடர்கள் இழிவு செய்கின்றனர்.

**ஒவ்வொரு யுகத்திலும் ராட்சசர்கள் கடவுளுக்கு எதிராக அவதரிப்பார்கள், அந்தவகையில் தற்போது கலியுகத்தில் இந்த முட்டாள் மூடர்கள் ராட்சசர்கள் போன்றவர்களே...** சரி... இந்த முட்டாள் கூட்டத்தைப் பற்றி நாம் அதிகம் பேசினால் பயன் ஏதும் இல்லை. இந்த ராட்சசர்களின் கை, கால்களை வீரவேல் கொய்து தகுந்த பாடம் கற்பிக்கவேண்டும் என்று கந்தனை வேண்டிக்கொள்வோம்.....

கந்த சஷ்டி பற்றி அற்புதமான விஷயங்களை பார்ப்போம்.

# கவசமாக இருந்து பக்தர்களை பாதுகாக்கும் கந்த சஷ்டிகவசம்

கவசம் என்றால் பாதுகாப்பது அல்லது காப்பாற்றுவது என்று பொருள்படும். போரின்போது வீரர்கள் எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ள கவசம் அணிந்து கொள்வார்கள். இதனால் அவர்களின் உடலில் எந்தவிதமான காயங்களும் ஏற்படாமல் அந்த கவசம் தடுத்துவிடும்.

அதைப்போன்றுதான் கந்த சஷ்டி கவசம் என்பது மனிதர்களை பல்வேறு தீமைகளிலிருந்தும், கஷ்டத்திலிருந்தும், நோய் நொடிகளி லிருந்தும் காப்பாற்றும் வல்லமை பெற்றதால் அதை கவசம் என்று அழைக்கின்றோம்.

இந்த கந்த சஷ்டி கவசத்தை அருளியவர் ஸ்ரீ தேவராய சுவாமிகள். தேவராய சுவாமிகள்



எதற்காக இந்தக் கவசத்தை பாடினார் தெரியுமா?

தேவராய சுவாமிகள் ஒரு சமயம் கடும் வயிற்றுவலியால் மிகவும் அவதிப்பட்டு வந்தார். எவ்வளவோ சிகிச்சைகள், எத்தனையோ வைத்தியர்களைப் பார்த்தும், பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டும் அவருடைய வயிற்றுவலி தீர்ந்தபாடில்லை. வாழ்க்கையே வெறுப்போய் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளும் முடிவோடு திருச்செந்தூர் சென்றார்.

அவர் சென்ற நாளில் திருச்செந்தூரில் கந்த சஷ்டி விழா ஆரம்பித்திருந்தது. தீவிர முருக பக்தரான தேவராய சுவாமிகள், சஷ்டி நாட்களில் விரதமிருந்து முருகனை மனம் குளிர வழிபட்டு சூரசம்ஹாரம் கண்ட பின்பு உயிர் விடலாம் என்று முடிவெடுத்தார்.

நல்ல அருட்கவியும், மந்திரநூல் வல்லுனரு மான தேவராய சுவாமிகள், சஷ்டி விரத நாட்களான ஆறு தினங்களில், தினத்துக்கு ஒன்றாக, ஆறு படை வீடுகளக்கும் தனித் தனியாக ஆறு கவசங்களை பாடி முடிப்பது என்று முடிவு செய்தார்.

அவ்வண்ணமே ஒவ்வொரு நாளும் ஒவ் வொரு படை வீட்டிற்குரிய கவசங்களை பாட ஆரம்பித்தார். அவர் ஒவ்வொரு படை வீட்டிற்கும் உரிய கவசங்களைப் பாட ஆரம்பித்ததும், அதுவரை அவரை பாடாய் படுத்திக்கொண்டிருந்த வயிற்றுவலி படிப்படியாக குறைய ஆரம்பித்தது.

சஷ்டியின் ஆறாவது நாளன்று வயிற்றுவலி அறவே நீங்கிவிட்டது. இப்படி பிறந்தவை தான் கந்த சஷ்டி கவசங்கள் ஆறும்.

தேவராய சுவாமிகள் ஒவ்வொரு படைவீட்டிற்கும் ஒவ்வொரு கவசமாக மொத்தம் ஆறு கவசங்களை இயற்றியுள்ளார். இவை அனைத்துமே "கந்த சஷ்டி கவசம்" என்ற ஒரே பெயரைத்தான் கொண்டு அழைக்கப்படுகின்றன.

அவர் முதன் முதலில் இயற்றிய 'திருச்செந்தூர் கவசம்' தான் பொதுவாக எல்லோரும் அறிந்தது.

'சஷ்டியை நோக்க சரவண பவனர்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்'

என்று தொடங்கும் கவசம்.

இதுபோல் ஒவ்வொரு படைவீட்டிற்கும் ஒவ்வொரு கவசம் உள்ளது. இருப்பினும் திருச் செந்தூர் கந்த சஷ்டி கவச நூலே பிரபலமாகி எல்லோராலும் அறியப்பட்டு பாடப்பட்டு வருகிறது. என்றாலும் ஆறு கவசத்தையும் ஒருங்கே பாடுவதே சிறப்புத்தரும்.

கடும் வயிற்றுவலி கண்ட தேவராயர் வலியின் தீவிரத்தை உணர்ந்தார். அதனால்தான் மனித உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் தனித்தனியாக குறிப்பிட்டு, ஒவ்வொரு உறுப்பையும் ஒவ்வொரு வேல் காக்க வேண்டும் என்ற பொருளில் பாடினார்.





தற்போது மனித உடலில் உள்ள உறுப்புகளை ஒவ்வொருவகையான நோய்கள் தாக்குகின்றன.

மார்பகங்களை–மார்பு புற்றுநோய்,
ஆண்,பெண்குறிகளை–பால்வினை நோய்கள்,
ஆசன வாயை – பைல்ஸ் என்ற மூலம்,

போன்ற ஏணைய நோய்கள் தாக்குகின்றன.

இவ்வாறு தனது உடலில் உள்ள உறுப்புகளில் நோய்தாக்கம் கண்டவர்கள் இந்த கந்தசஷ்டிகவசத்தை பாடும்போது நோய் தாக்கிய உறுப்பைப் பற்றிய வரிகளை படிக்கும் போது தன்னால் கண்ணிலிருந்து கண்ணீர் வந்துவிடுவதை பார்க்கிறோம், அந்த நோயின் வலியின் தீவிரத்தை உணர்ந்ததால் அவர்கள் மனதான அந்த வரிகளில் உண்மையை உணர் கின்றனர்.

மருத்துவரிடம் வெளிப்படையாக மார்பகம், ஆண்குறி, பெண்குறி, ஆசனவாய் போன்றவற் றில் உள்ள பிரச்ச னைகளை வெளிப்படையாக கூறினால்தான் மருத்துவர் தகுந்த மருத்துவ உதவியை செய்வார். இதில் ஆபாசம் ஏதும் இல்லை.

அதுபோன்றுதான் கடவுளான முருகனிடம் கொடிய நோய்கள் எதுவும் தங்களை தாக்கிவிடக் கூடாது என்ற நோக்கத்தில் தங்கள் உடல் உறுப்புகளை குறித்து அவற்றை காக்க வேண்டும் என்று சொல்வதில் தவறு ஏதும் இல்லை.

ஆபாசத்தில் ஊறித் திளைத்தவன் கூட அந்த அந்த உறுப்புகள் நோய்வாய்ப்படும்போது அதை ஆபாசமாக பார்க்க மாட்டான்.

இதனால் தினமும் கந்த சஷ்டி கவசத்தை ஒருமுறை கேட்பதோ... அல்லது படிப்பதையோ கடமையாக செய்தால் நமது உடல் உறுப்புகள் பாதுகாக்கப்படும்.



சுக்குக்கிற்கு இணையான மருந்தும் இல்லை
சுப்பிரமணியனுக்கு நிகரான தெய்வமும்
இல்லை என்பதற்கு ஏற்ப, முருகனை மருத்துவனாக நாம் நினைத்து அவனிடம் நமது உடலை காக்குமாறு கவசம் பாடுவோம்.

முருகனுக்கு உகந்தநாள் சஷ்டி. சஷ்டி என்றால் ஆறு. முருகனுக்கு முகங்கள் ஆறு. முருகனின் படை வீடுகள் ஆறு. முருகனை வளர்த்த கார்த்திகைப் பெண்கள் ஆறு, 'சரவணபவ' என்ற முருகனின் மந்திரம் ஆறெழுத்து, ஜாதகத்தின் ஆறாம் இடம் பொதுவாக விரோதம், கடன், ரோகம், சத்ரு பேன்றவற்றை குறிக்கும்.

இந்த தோஷங்கள் அனைத்தையும் போக்கும் வல்லமை கொண்டவன் முருகப் பெருமான் மட்டுமே. கந்தன் என்று சொன்னாலே, வந்த வினையும், வருகின்ற வல்வினையும் நீங்குமே. இந்த கந்த சஷ்டி கவசத்தை பாராயணம் செய்தால் கிடைக்கும் பயனை சொல்லவும் வேண்டுமா?

இத்தனை சிறப்பு வாய்ந்தது இந்த கந்த சஷ்டி கவசம். இதனை பாராயணம் செய்வோர்களின் தேவையை உணர்ந்து, அறிவு, செல்வம், சந்தானம், வெற்றி ஆகியவற்றை அவர்கள் விரும்பிக் கேட்டாலும், கேட்காவிட்டாலும் தானே அருளும் சக்தி வாய்ந்த கவசமாகும்.

பாம்பன் சுவாமிகள் அடிக்கடி மனம் உருகி இந்த கந்த சஷ்டி கவசத்தை பாராயணம் செய்து கொண்டிருப்பார். அப்படி ஒருமுறை பாராயணம் செய்தபோது தானும் இதேபோல் ஒரு கவச நூலை முருகன்மீது பாடவேண்டும் என்று நினைத்தார். அப்படி அவர் பாடியதுதான் 'சண்முக கவசம்'. இந்த சண்முக கவசமும் ஆறு கவசங்களை உள்ளடக்கியது என்பது குறிப்பிடதக்கது.

– சி.என்.ராஜா

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com




# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

**இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி**

aanmeegamalar.com

aanmeegamalr (app)-ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**